21ST APRIL 2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 104 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com




# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்; உண்மைகளை வெளிக் கொணருங்கள்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்!

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான உண்மைகளை மறைக்க சில தரப்பினர் முற்பட்டு வருகின்றனர்.சட்டத்தின் முன் அனைவரும் சமம்.எனவே எத்தகைய உயர் பதவிகளிலிருந்தாலும் உண்மைகளை வெளக்கொணர ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதல் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக இடம்பெற்ற கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்களின் பின்னணியில் உள்ள உண்மைகள் காலப்போக்கில் மறைக்கப்படுவது போன்றேஇ உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளும் அரசியல்

02ம் பக்கம்பார்க்க...

# அமெரிக்கா போரைத் தொடங்கினால் கொடூரமான பதிலடி

## ஈரான் எச்சரிக்கை!

மீண்டும் தொடங்கப்படும் எந்தவொரு விரோத நடவடிக்கைக்கும் ஈரான் தீர்க்கமாகப் பதிலடி கொடுக்கும் என மூத்த தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிரிகள் மீண்டும் மேற்கொள்ளும் எந்தவொரு விரோத நடவடிக்கைக்கும்

02ம் பக்கம்பார்க்க...

# உடன்பாடு எட்டப்படாவிடின் தாக்குதல் தொடங்கும்!

## - எச்சரிக்கும் ட்ரம்ப் -

தற்காலிக யுத்த நிறுத்தம் 22 புதன் நிறைவடையவுள்ள நிலையில் அதற்கிடையில் உடன்பாடு எட்டப்படாவிடின் ஈரான் மீது மிகக் கொடுமையான தாக்குதல் நடாத்தப்படுமென அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

# இந்த ஆண்டு ஆட்சியைப் பிடிக்க பொதுஜன பெரமுன திட்டம்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

இந்த வருடம் ஆட்சியை பிடிப்பதற்கான பாரிய திட்டம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லயில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் இன்று நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டதன் பின்னர், ஊடகங்களுக்கு

02ம் பக்கம்பார்க்க...



# ஆட்சியைக் கைப்பற்றும் மஹிந்த கூற்று பகற்கனவு

## பிமல் ரத்நாயக கிண்டல்

நாட்டை குட்டிச்சுவராக்கிய பொதுஜன பெரமுன ஆட்சியைக் கைப்பற்ற நினைப்பது வேடிக்கையானது அமைச்சர் பிமல் ரத்நாயக தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சியைப் பிடிப்போம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரவித்துள்ள கருத்துக் குறித்தே

02ம் பக்கம்பார்க்க...

# நற்சான்றிதழ்களைக் கையளித்த பாக்., குவைத் தூதுவர்கள்





இலங்கைக்காக நியமிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) நய்யார் நஸீர் குவைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சலே முபாரக் அல் சரவி உட்பட இலங்கைக்காக நியமிக்கப்பட்டுள்ள நான்கு புதிய தூதுவர்கள் ஆகியோர் ஜனாதிபதி செயலகத்தில்

02ம் பக்கம்பார்க்க...

# கொழும்பில் குண்டுத் தாக்குதல்; இணையத்தள செய்திகளில் உண்மையில்லை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு உள்ளிட்ட சனநெரிசலான பகுதிகளில் தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்த நபர் ஒருவர் தயாராகி வருவதாக சமூக ஊடகங்கள் மற்றும் சில இணையத்தளங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப். யூ. வுட்லர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான எந்தவொரு சம்பவமும் பதிவாகவில்லை என்பதை அவர் மேலும் உறுதிப்படுத்தினார்.

எவ்வாறாயினும், “கஞ்சிப்பானை இம்ரான்“ என்பவருடன் நெருங்கிய

02ம் பக்கம்பார்க்க...

# தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் பிரச்சாரப் பணிகள் யாவும் நிறைவு;

## நாளை மறுநாள் (23) தேர்தல்

### இம்முறை நான்முனைப் போட்டி

தமிழகத்தில் கடந்த 20 நாட்களாக நடைபெற்று வந்த அனல் பறக்கும் பிரசாரம் இன்று மாலை 6 மணியுடன் ஓய்ந்துள்ளது.

இதைத்தொடர்ந்து, நாளை மறுதினம் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்குகிறது. தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் நாளை மறுநாள் (23ம் தேதி) ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது. மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர்.




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## இந்த...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழல் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக, பொதுமக்களிடையே புத்தாண்டு தொடர்பான உற்சாகமோ அல்லது உண்மையான புத்தாண்டு உணர்வோ காணப்படவில்லை.

மக்கள் கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே இம்முறை புத்தாண்டை கொண்டாடினர்.

இம்முறை மே தினம் பௌத்தர்களின் புனித நாளான வைகாசி பௌர்ணமி தினத்தில் வருவதால், அரசியல் ரீதியிலான மே தின ஊர்வலங்கள் அல்லது கூட்டங்களை நடத்தப் போவதில்லை.

மே தினத்திற்குப் பதிலாக அன்றைய தினம் சமய வழிபாடுகள் மற்றும் 'பிங்கம் எனப்படும் பௌத்த புண்ணிய காரியங்கள்'உள்ளிட்ட ஆன்மீக நிகழ்வுகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

புதிய ஆண்டில் அரசியல் ரீதியான மாற்றங்கள் ஏற்படுமா? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், நிச்சயமாக மாற்றங்கள் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான ஒரு பெரிய அளவிலான திட்டத்தை தமது கட்சி வைத்துள்ளது.

வரவிருக்கும் அரசியல் சவால்கள் மற்றும் மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்காக தமது கட்சி முழுமையாகத் தயாராக இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## ஆட்சியைக்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அவர்,மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வின் பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச "பொருளாதாரச் சுமையால் மக்களிடம் புத்தாண்டு உற்சாகம் இம்முறை இல்லை. மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றப் பாரிய திட்டத்துடன் களம் இறங்குவோம் என்று குறிப்பிட்டிருந்தார்

இதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழல் குறித்து மகிந்த ராஜபக்ச கவலை வெளியிட்டிருப்பது வேடிக்கையானது. நாட்டைத் வங்குரோத்து நிலைக்குத் தள்ளி, மக்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியவர்களே ராஜபக்சக்கள்தான்.

பொருளாதாரச் சுமை குறித்துப் பேசுவதற்கு அவர்களுக்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் கிடையாது. பாரிய திட்டத்துடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம் எனக் கூறுவது பகற்கனவு காண்பதற்குச் சமனாகும். மக்கள் அவர்களை ஏற்கனவே நிராகரித்துவிட்டார்கள்.

இப்போது அவர்கள் கவலைப்பட வேண்டியது மீண்டும் அதிகாரத்துக்கு வருவது பற்றி அல்ல, கடந்த காலங்களில் மக்கள் சொத்துக்களைச் சூறையாடியமை மற்றும் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகளுக்குச் சட்டத்தின் முன் எவ்வாறு பதிலளிக்கப் போகிறோம் என்பது குறித்துத்தான் என்றார்.

புதிய ஆண்டில் அரசியல் மாற்றம் ஏற்படும் என மகிந்த ராஜபக்ச கூறியிருப்பதை வழிமொழிந்த அமைச்சர், "நிச்சயமாக அரசியல் மாற்றம் ஏற்படும்.

ஆனால் அது அவர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்காக அல்ல மாறாக, அவர்கள் உருவாக்கிய ஊழல் கலாசாரத்தை முற்றாக ஒழித்து, முறையான ஜனநாயகத்தை நிலைநாட்டவே அந்த மாற்றம் அமையும்.

ராஜபக்சக்களின் அரசியல் சகாப்தம் இலங்கையில் முடிவுக்கு வந்துவிட்டது என்பதை அவர்கள் உணர வேண்டும்" என்றார்.

## நற்சான்றிதழ்களை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஜனாதிபதி அனுர குமார திஸ ாநாயக்கவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களைக்கையளித்தனர்.

***01.*** பப்புவா நியூ கினியா சுதந்திர நாட்டின் உயர்ஸ்தானிகராக வின்சென்ட் சுமேல் (Vincent Sumale) (புதுடில்லியை தளமாகக் கொண்டவர்).

***02.*** சோமாலிய பெடரல் குடியரசின் தூதுவராக அப்துல்லாஹி முகமது ஒடோவா (யுடினரடடயாை ஆழாயஅஅநன முனழறய) (புதுடில்லியை தளமாகக் கொண்டவர்).

***03.*** லக்சம்பர்க் நாட்டு தூதுவராக கிறிஸ்டியன் பீவர் (Christian Biever) (புதுடில்லியை தளமாகக் கொண்டவர்).

***04.*** வத்திக்கானின் அப்போஸ்தலிக்க தூதுவராக மொன்சிஞ்ஞோர் ஆண்ட்ரே ஜோஸ்வோவிக் (Monsignor Andrzej Józwowicz)

***05.*** பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகராக மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) நய்யார் நசீர் (Nayyar Naseer)

***06.*** குவைத் நாட்டின் தூதுவராக சலே முபாரக் அல்-சரவி (Saleh Mubarak Al-Sarawi)

ஆகியோர் இவ்வாறு ஜனாதிபதியிடம் தமது நற்சான்றிதழ் பத்திரங்களை கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து அவர்களுடன் ஜனாதிபதி சுமூகமான உரையாடலில் ஈடுபட்டதோடு வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

## கொழும்பில்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தொடர்புகளைப் பேணிய நபர் ஒருவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்கா...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

"உடனடி மற்றும் தீர்க்கமான பதிலடி" கொடுக்க ஈரானின் ஆயுதப் படைகள் தயாராக உள்ளன என்று ஈரானின் மூத்த இராணுவத் தளபதி ஒருவர் கூறியதாக, ஈரானிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கதம் அல்-அன்பியா மத்திய தலைமையகத்தின் தளபதி அலி அப்தோல்லாஹி, ஹோர்முஸ் நீரிணையின் மேலாண்மை உட்பட, இராணுவத் துறையில் தெஹ்ரான் மேலாதிக்கத்தைத் தக்கவைத்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

"கள நிலவரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி தவறான கதைகளை உருவாக்குவதை" ஈரான் அனுமதிக்காது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## உடன்பாட்டு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

யுத்த நிறுத்த காலப்பகுதியில் நாம் அதிகளவு ஆயுதங்களைத் தயார்படுத்தி வைத்துள்ளோம். எல்லாம் எமக்கு சாதகமாகவே உள்ளது.நான் உத்தரவிட்டால் யுத்தம் ஆரம்பமாகும் என ஊடக நேர்காணலொன்றில் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அதிகாரத்தைப் பயன்படுத்தி பலவீனப்படுத்தப்படுவதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

ஸஹ்ரான் ஹாஷிமுடன் இரகசியமாகத் தொலைபேசியில் உரையாடிய "அபு ஹிந்த்" எனும் நபர் யார்? தாக்குதலில் அவரது பங்கு என்ன என்பது இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

கட்டுவாப்பிட்டிய தாக்குதல்தாரி ஹஸ்தூனின் மனைவியான சாரா ஜாஸ்மின் சாய்ந்தமருது குண்டு வெடிப்பில் உயிரிழந்ததாகக் கூறப்பட்டாலும், மூன்று மரபணு (DNA) சோதனைகளிலும் அது உறுதிப்படுத்தப்படவில்லை. அவர் உயிருடன் இருப்பதாகக் கூறப்படும் சாட்சியங்கள் தொடர்பில் விசாரணை செய்யப்பட வேண்டும்.

அத்துடன், அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவின் தொலைபேசி மற்றும் கணினித் தரவுகள் திட்டமிட்ட முறையில் அழிக்கப்பட்டது ஏன்? என்றும் அது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

2018 ஆம் ஆண்டில் இரண்டு காவல்துறை அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு ஸஹ்ரானின் குழுவினரே பொறுப்பு என்ற போதிலும்இ சில அதிகாரிகள் அதனை விடுதலைப் புலிகள் மீது சுமத்த முயன்றனர். இது விசாரணையைத் திசைதிருப்பும் ஒரு முயற்சியாகும்.

அதேநேரம், இந்திய உளவுத்துறை நான்கு முறை எச்சரிக்கை விடுத்தும் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அவர் கேள்வி எழுப்பினார். மேலும்இ சஹ்ரானுடன் தொடர்பிலிருந்த ஒருவரின் ஐபி (IP) முகவரியை அமெரிக்காவின் (FBI) வழங்கியபோது, அவரைப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து விசாரித்தனர்.

ஆனால், அது ஒரு "தேசிய பாதுகாப்பு தொடர்பான இரகசிய நடவடிக்கை" எனக் கூறி அந்த விசாரணை தடுத்து நிறுத்தப்பட்டது.

மேலும் "சொனிக் சொனிக்" என்ற குறியீட்டுப் பெயரில் செயற்பட்ட காவல்துறை பரிசோதகர் பண்டார, தீவிரவாதிகளுடன் தொடர்பிலிருந்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு ஐஎஸ் அமைப்பு பொறுப்பேற்க வேண்டும் என்று அதன் தலைமையை வலியுறுத்துமாறு அவர் கேட்டுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

அதேபோல, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி அதிகாலை 3 மணிக்குஇ தடுத்து நிறுத்தப்பட்ட ஒரு சந்தேகத்திற்குரிய பாரவூர்தியை பரிசோதிக்காமல் விடுவிக்குமாறு அப்போதைய பிரதி காவல்துறைமா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உத்தரவிட்டது ஏன் என்பது விசாரிக்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவது ஆட்சியாளர்களின் கடமையாகும்.

இந்தநிலையில, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, கட்டுவாபிட்டியவில் வழங்கிய வாக்குறுதியின்படி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மைகளை வெளிக்கொணர வேண்டும்

சட்டத்தின் முன் அனைவரும் சமம். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும்இ அவர்கள் உயர் அதிகாரிகளாகவோ அல்லது போர் வீரர்கள் என்று போற்றப்படுபவர்களாகவோ இருந்தாலும் அவர்களுக்கு எதிராகச் சட்டம் பாய வேண்டும்" என்று கர்தினால் வலியுறுத்தினார்.

அப்பாவி மக்களின் இரத்தம் நீதிக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருப்பதாகவும், கடவுள் ஒருநாள் நிச்சயமாகத் தீர்ப்பு வழங்குவார் என்றும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தனது உரையை நிறைவு செய்தார்.



# புத்தளம் தள வைத்தியசாலையில் முதன் முறையாக முள்ளந்தண்டு நேராக்கல் (Scoliosis Correction) சத்திர சிகிச்சை இடம்பெற்றது

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் தள வைத்தியசாலையில் முதன் முறையாக இடம்பெற்ற முள்ளந்தண்டு நேராக்கல் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், பதுளை மற்றும் இரத்தினபுரி போன்ற ஒரு சில வைத்தியசாலை களில் மாத்திரம் மேற் கொள்ளப்படும் இவ்வகையான சத்திரசிகிச்சை புத்தளத்தில் முதன்முறையாகடம் பெற்றுள்ளது.

கடந்த சில மாதங்களாக முள்ளந்தண்டு சத்திர சிகிச்சைகள் இங்கு இடம் பெற்று வந்த போதிலும் முள்ளந்தண்டு நேராக்கல் சத்திர சிகிச்சை, புத்தளம் தள





வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டமை இதுவே முதலாவது சந்தர்ப்பம். என்பு முறிவு விசேட வைத்திய நிபுணர் ஷெஸார் ஹமீத் தலைமையில் இடம்பெற்ற இந்த சத்திர சிகிச்சைக்கு, சிரேஷ்ட என்பு முறிவு விசேட வைத்திய நிபுணர்களான தேசிய வைத்தியசாலையை சேர்ந்த டாக்டர் உதை டி சில்வா மற்றும் லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் டாக்டர் நிர்மல் மாரசிங்ஹ ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

நினைவிழக்க செய்யும் விசேட வைத்தியராக சரிந்த, தனது பணியை செவ்வனே நிறைவேற்றியுள்ளார்.

40 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் செலவாகும் இந்த சிகிச்சை முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும், மேலும் இலங்கையில் உள்ள தள வைத்தியசாலைகளில் இது போன்ற இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவில்லை என்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

## ஓட்டமாவடி பிரதேசம் பாரிய ஆபத்தில் – மாற்று நடவடிக்கை கோரி முன்னாள் அமைச்சர் அமீர் அலி மகஜர்

(எஸ்.எம்.எம். முர்ஷித்)

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளையும் நகர அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் அதன் பாதகங்கள், அதனால் மக்கள் எதிர்கொள்ளப்போகும் ஆபத்துக்கள் தொடர்பிலும் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, தெளிவுபடுத்தியும் முன்னாள் விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எம்.எஸ்.எஸ்.அமீர் அலி பிரதேச அபிவிருத்திக்குழுத்தலைவரும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினருமான கந்தசாமி பிரபுக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளார். அவர் தனது கோரிக்கையில் தெரிவித்ததாவது....

மேற்படி விடயம் தொடர்பில் 2023.07.04ல் வெளியிடப்பட்ட இல 2339ஃ03 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கோறளைப் பற்று ஓட்டமாவடி பிரதேச சபைக்கு உட்பட்ட மீராவோடை மேற்கு, கிழக்கு, ஓட்டமாவடி தெற்கு, ஓட்டமாவடி 02, ஓட்டமாவடி 03, ஓட்டமாவடி வடக்கு, கள்ளிச்சை, வடமுனை, ஊத்துச்சேனை, மாஞ்சோலை, புனானை மேற்கு, வாகனேரி, காகித நகர், தியாவட்ட வான் ஆகிய 14 கிராம சேவகர் பிரிவுகள் அடங்கிய பிரதேசங்களை நகர அபிவிருத்தி பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அறிவிப்பானது இப் பிரதேசத்திலுள்ள நிறுவனங்கள், முக்கியஸ்தர்கள், பொதுமக்களின் எந்தவிதமான அபிப்பிராயங்களும் பெற்றுக்கொள்ளப்படாத நிலையில் தன்னிச்சையாக செயற்பட்ட அதிகாரிகளினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதை தங்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றேன்.

கடந்த 05.04.2026ல் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையில் தங்களின் தலைமையில் இடம்பெற்ற அறிமுக நிகழ்வின் பின்பு தான் இப்பிரதேசத்தில் இவ்வாறான பிழையான செயற்பாடு இடம்பெற்றுள்ளது என்பதை இப்பிரதேச மக்களால் அறிய முடிந்தது.

நான் அறிந்த வரையில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 12 உள்ளூராட்சி மன்றங்களில் மட்டக்களப்பு மாநகர சபை, ஏறாவூர் நகர சபை மற்றும் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்கள் மாத்திரம் தான் மேற்படி நகர அபிவிருத்தி விரிவாக்கல் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் எஞ்சியுள்ள 09 உள்ளூராட்சி மன்றங்கள் மேற்படி






திட்டத்தின் கீழ் இணைத்துக்கொள்ள வில்லை என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகிறேன்.

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள 14 கிராம சேவகர் பிரிவுகளில் 08 கிராம சேவகர் பிரிவுகள் மிக மிக பின் தங்கிய, வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட அடிப்படை வசதிகளற்ற கிராம சேவகர் பிரிவுகளாகும்.

அத்தோடு, இப்பிரதேசங்களில் வாழும் குடும்பங்களில் பெரும் பாலானவர்களுக்கு தங்களது வாழ்விட உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் சட்டபூர்வமான ஆவணங்கள் இதுவரையில் வழங்கப் படவில்லை. என்பதை தாங்களும் உறுதியாக அறிவீர்கள்.

இந்நிலையில், மேற்கூறிய 08 கிராம சேவகர் பிரிவுகளும் நகர அபிவிருத்தித்திட்டமிடல் பிரதேசமாக அமுல்படுத்தப்படுமாக இருந்தால் இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர் நோக்குவதோடு குறிப்பாக, ஒரு கழிப்பறையை அமைத்துக் கொள்வதற்குக்கூட அனுமதியை பெற்றுக் கொள்ள முடியாத துப்பாக்கியத்துக்குள் தள்ளப்படுவதாக உணர்கிறார்கள்.

அத்தோடு, கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேசத்தில் வாழும் மக்கள் மிக மிக இடநெருக்கடியோடு வாழ்ந்து வருவதை நீங்களும் தெளிவாக அறிந்து வைத்திருப்பீர்கள் என பெரிதும் நம்புகிறேன்.

எதிர்காலத்தில் ஒரு வீட்டை அமைத்துக்கொள்வதற்கு ஆகக் குறைந்தது 06 (ஆறு) பேர்ச் காணி தேவை என்பது நகர அபிவிருத்தி சபையின் அடிப்படைத்தேவைப்பாடு என்பது சாத்தியப்படுத்தக்கூடிய ஒன்றாக இப்பிரதேச குடியிருப்பாளர்கள் கருதவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் மேற்படி திட்டம் இதுபோன்ற கிராமங்களுக்கு கிடைக்கும் நன்மைகளை விட பாதகமாகவும், காலதாமதமாகவும், பணச்செலவுக்கும் தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்துவிடும்.

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளும் நகர அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் இதனை வெற்றிகரமாக அமுல்படுத் துவதற்கு முன்பாக மிக முக்கியமாக பின்வரும் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

2023.07.04ம் திகதிய 2339ஃ03 இலக்க அதிவிசேட வர்த்தமானியை இரத்துச்செய்து நகரமயப்படுத்தலுக்கு போதுமான வளம் கொண்ட கிராம சேவகர் பிரிவுகளை மாத்திரம் அடையாளப்படுத்தலும், புதிய வர்த்தமானி பிரகடனமும்.

இப்பிரதேசத்திலுள்ள அரச நிறுவனங்கள். சமூக மட்ட அமைப்புக்கள், சமூகப்பிரதிநிதிகள், பொதுமக்கள் போன்றவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்.

இப்பிரதேசத்தில் வாழும் அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் வாழ்விட உரிமையை உறுதிப்படுத்தலும், சட்ட பூர்வ உரிமையை உறுதிப் படுத்தலும், சட்ட பூர்வமான ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

எனவே, தங்களின் அரசாங்கத்தின் பிரதான தொனிப்பொருளான ‘சமத்துவமான மற்றும் பொது மக்கள் உள்ளடக்கக்கூடிய அணுகுமுறையினுடாக’ செயற் படுத்தப்பட வேண்டுமென்பது இப்பிரதேச மக்களின் பலமான எதிர்பார்ப்பாக இருப்பதனால், இவ்விடயத்தில் அதிக சிரத்தை எடுத்து நடைமுறைக்குச்சாத்தியமான புதிய வர்த்தமானி அறிவிப்பொன்றை வெளியிட ஆவண செய்து தரும்படி இப்பிரதேச மக்களின் சார்பாக பணிவுடன் கோரிக்கை விடுக்கிறேன் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் தனது கோரிக்கை மகஜரில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்ட விழிப்புணர்வு செயல்திட்டம்



(எம் எச் எம் சியாஜ்)

கருவலகஸ்வெவ பொலிஸ் போக்குவரத்து பொறுப்பதிகாரி கருவலகஸ்வெவ வீதியின் ஊடாக நீண்ட தூர பேருந்துகளில் பயணிக்கும் பிரயாணிகளின் நலன் கருதியும் சாரதி மற்றும் நடத்துனர்களுக்கான விழிப்புணர்வு செயல்திட்டம் ஒன்றை முன்னெடுத்தார்.

இவ் விழிப்புணர்வு செயல்திட்டம் ஊடாக விபத்துகள், பயணிகளின் பணம் மற்றும் பொதிகளின் திருட்டுக்களை எவ்வாறு முறியடிப்பது போன்ற பல்வேறு செயல்திட்டங்களை செயற் திட்டங்கள் போக்குவரத்து பொலிஸார் முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 33 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஊடகவியலாளர் ஏ.எஸ்.எம்.ஜாவித்



மன்னார் விடத்தல் தீவை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அப்துல் ஸத்தார் முஹமட் ஜாவித் தனது 33 வருட கால அரச சேவையில் இருந்து கடந்த 15 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளார்.

மன்னார் விடத்தல் தீவு அலிகார் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் பொதுப் பரீட்சை மூலம் சித்தியடைந்து 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அரச முகாமைத்துவ சேவையில் இணைந்து கொண்டார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் முதல் நியமனம் பெற்று 12 வருடங்கள் அங்கு கடமையாற்றி 2004 ஆம் ஆண்டு மன்னாரில் இருந்து கொழும்பில் அமைந்துள்ள முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் இடமாற்றலாகி தனது கடமையை பொறுப்பேற்று திணைக்களத்தில் சமய விவகாரம் பிரிவு, நிருவாகப் பிரிவு, கணக்குப் பிரிவு போன்றவற்றிற்கு பொறுப்பாக இருந்து இறுதியாக வக்பு. பிரிவுக்கு ( இலங்கையில் உள்ள சகல பள்ளிவாசல்களின் பிரிவு) பொறுப்பாக இருந்து தனது 33 வருட கால சேவையை முடித்துக் கொண்டு ஓர் பெற்றுள்ளார்.

பல துறைகளிலும் அனுபவம் கொண்டவராகவும் சமுக சேவையாளராகவும் அகில இலங்கை சமாதான நீதவானாக வும் காணப்படும் இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடக டிப்லோமா கற்கை நெறியை முடித்து ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளராகவும் தனது பணியை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2026 APRIL 21 - TUESDAY

WEB: www.uthayam.lk

E-mail: editor.uthayam@gmail.com

FB ID: உதயம்

# பள்ளிகள்தோறும் சுகாதாரக் குழுக்களை அமைப்பது சிறந்த யோசனை

முஸ்லிம் கிராமங்களில் சுகாதாரக் குழுக்கள் அமைப்பதன் அவசியத்தைப் பற்றி வைத்திய நிபுணர் டாக்டர் இர்ஷாத் மசூத் அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

கொழும்பில் புனித ரமழான் காலத்தில் நடைபெற்ற சுகாதாரம் சம்பந்தமான போட்டியொன்றின் பரிசளிப்பு விழாவின் போது அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

சமூகத்தின் மத்தியில் அவசியமானதொரு தேவையை டாக்டர் இர்ஷாத் தெரிவித்திருந்தார்.

இன்று முஸ்லிம் சமூகத்தின் விகிதாசாரத்திற்கு அதிகமாக பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுகின்றவர்கள் இருக்கின்றார்கள்.

இதற்கு உண்மையிலே சமூகத்தின் உணவுப் பழக்கமும் ஒரு காரணமாக இருக்குமென்று பல டாக்டர்கள் இதற்கு முன்பும் தெரிவித்திருந்தார்கள்.

இதை எப்படி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்பது அவசியமாகும்.

இள வயது மரணங்கள், இள வயதிலே நோய்கள் ஏற்பட்டு பாதிக்கப்படுகின்றவர்கள் சம்பந்தபட்டவர்கள் புள்ளி விபரங்களை எடுத்து பார்த்தால், சமூகத்தில் நிறைய இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

ஒப்பீட்டளவில் முஸ்லிம் சமூகத்தின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கும் என்றே கூறப்படுகின்றது.

டாக்டர் இர்ஷாத் கொடுத்திருக்கின்ற ஆலோசனை சமூகத்தின் மத்தியிலே தீவிரமாக ஆராயப்பட்டு நிற்கின்றதொரு நடைமுறையை வகுப்பது அவசியமாகும்.

இளவயதில் நீரிழிவு, இதய நோய் போன்ற அநேக விடயங்கள் முஸ்லிம் சமூகத்தின் உணவுப் பழக்க வழக்கங்கள் சற்று நோய்களை கூட்டக்கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக சமூகத்தின் மத்தியில் விரிவாக ஆராயப்பட வேண்டும்.

சமூகத்தின் மத்தியில் இருக்கின்ற டாக்டர்கள் இதுகுறித்து சமூகத்தை அறிவுறுத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் இவ்வாறான குழுக்கள் இருந்தால் சுகாதாரம் தொடர்பான வழிகாட்டல்களை வழங்கலாம். இதனால் நாட்டுக்கும், சமூகங்களுக்கும் நன்மைகள் தான் கிடைக்கும். ஆகவே, மிக வரவேற்கக் கூடிய ஓர் ஆலோசனையை டாக்டர் இர்ஷாத் தெரிவித்திருக்கின்றார்.

நீண்ட காலமாக சமூகத்தின் முன் இவ்வாறான அமைப்புகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். தாமதித்தேனும் இவ்வாறான அமைப்புகள் உருவாக்கப்படுவது வரவேற்கப்பட வேண்டும். புள்ளி விபரங்களை எடுத்துப் பார்த்தால், கூடுதலானவர்கள் இந்த நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே, நோய் வருவதற்கு முன் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை அறிவூட்ட வேண்டும். இது மிக முக்கியமானது. சுகாதார அமைச்சினுடைய ஒத்துழைப்பையும் பெற்று இந்தக் குழுக்களை ஏற்படுத்தி மாதாமாதம் அறிவூட்டல்களைச் செய்து சமூகத்தின் மத்தியிலே அதிகரித்து வருகின்ற நோயாளிகளுடைய எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்.

ஆகவே, இது குறித்து பள்ளி பரிபாலன சபைகள் சிந்திக்க வேண்டும். தங்களது எல்லைக்குள் பள்ளிகளை நிர்வாகிக்கின்றவர்கள் வைத்தியர்களுடைய உதவிகளைப் பெற்று, பிரதேச சுகாதார அதிகாரிகளுடைய உதவியைப் பெற்று, இந்த சுகாதாரக் குழுக்களை அமைத்து, அதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி, முன்னெடுப்பது அவசமாகும். இது காலத்தின் தேவையாகும்.

வைத்தியசாலைகளுக்குச் சென்றால் நிறைய எங்களுடைய மக்கள் இந்த நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் அந்தக் குடும்பங்களுடைய கல்வி, முன்னேற்றம் எல்லாம் தடைப் பட்டிருக்கின்றன.

இள வயது மரணங்கள் சமூகத்திலே இருக்கின்றன.

அத்தோடு, இப்போது இருக்கின்ற மற்றொரு பிரச்சினை விபத்துகளில் சிறியவர்கள் மோட்டார் சைக்கிள் போன்ற வாகன விபத்துகள் அதிகமாக இருக்கின்றன.

இது பற்றியும் நாங்கள் அறிந்திருக்க வேண்டும். சிறுவர்கள் மோட்டார் சைக்கிள் ஓட ஆசைப்படுகிறார்கள் தான். ஆனால், அதனால் ஏற்படுகின்ற இந்த விடுமுறை காலகட்டத்திலே நாட்டில் நிறைந்த மரணங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

இவைகளை படிப்பினையாகக் கொண்டு பிள்ளைகளுக்கு மோட்டார் சைக்கிளை வழங்குவதில் மட்டுப்படுத்துவதுவது அவசியமாகும்.

இது தொடர்பாக பெற்றோர், தாய்மார்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஆகவே, கிராமங்கள் தோறும் பள்ளிவாசல்களில் மையமாக வைத்து சுகாதார குழுக்களை அமைப்பதற்கு முன் வரவேண்டும்.

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களமும் தம் பள்ளிவாசல்களுக்கு இதற்கான வழிகாட்டல்களை வழங்கி, சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்த குழுக்களை அமைத்து சுகாதார ரீதியான வாழ்க்கையை சமூகத்தில் ஏற்படுத்த முன்மாதிரி காட்ட வேண்டும்.






# மாளிகைக்காடு, காரைதீவு, மாவடிப்பள்ளி ஆகிய கிராமங்களில் புதிய வீடுகளுக்கு அடிக்கல் நாட்டிவைப்பு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

"தனக்கான ஓர் இடம், அழகான வாழ்கை" எனும் தொனிப்பொருளில் காரைதீவு பிரதேச செயலகத்திற் குட்பட்ட மாளிகைக்காடு, காரைதீவு, மாவடிப்பள்ளி ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கான 01 மில்லியன் ஷரூபாய் பெறுமதியான வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரஜாசக்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப் பட்ட இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் பர்ஹான், காரைதீவு செயற்பாட்டாளர்களான பத்மசீலன், ஆசிரியர் சுசி மற்றும் மாவடிப்பள்ளி அமைப்பாளரும், பிரஜாசக்தி தவிசாளருமாகிய சப்றூஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் ஆசிரியர் ஆரிப் உட்பட பிரஜாசக்தி உறுப்பினர்கள், பொதுமக்கள், பயனாளிகள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் மற்றும் காத்தான்குடி ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு



**(எம்.பஹ்த் ஜுனைட்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் மற்றும் விடி வெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பீ.எம்.பைறூஸ் மற்றும் காத்தான்குடி பிரதேச ஊடகவியலாளர்கள் இடையிலான சந்திப்பு (14) அல் பஜ்ர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

காத்தான்குடி மீடியா போரத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.நூர்தீன் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஊடகவியலாளர்களின் சமூகப் பொறுப்புக்கள் , ஊடக ஒழுக்கங்கள், செய்தி சேகரிப்பின் போது எதிர்நோக்கும் சவால்களும் தீர்வுகளும், ஊடக ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிப்பதன் அவசியம் தொடர்பிலும் இதன் போது விரிவாக கலந்துரையாடப் பட்டது.

இச் சந்திப்பில் சிரேஷ்ட ஊடக வியலாளர்களான மதியன்பன் மஜீட், எம்.ஏ.சீ.எம்.ஜெலீஸ், எம்.எச்.எம்.அன்வர், எம்.எஸ்.எம். ஜவ்பர் மற்றும் இளம் ஊடக வியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# உலக யுத்தத்துக்கு எதிராக களுத்துறை பிரதேச பாடசாலையின் மலையக சிறுவர்கள் களத்தில்

**(எம்.எச்.எம்.சியாஜ்)**

"எமது எதிர்காலம் அமைதியின் மடியில் மலர வேண்டும்." "நாங்கள் பாடல்களைப் பாட விரும்புகிறோம்- யுத்தக் குண்டுகளின் சத்தங்களை அல்ல."

"அமைதியே எங்கள் விளையாட்டு- போர் எங்கள் பயம்." "எங்களுக்கு புத்தகங்கள் போதும்-துப்பாக்கிகள் தேவையில்லை."

"எங்களுக்கு நண்பர்கள் போதும்- எதிரிகள் தேவையில்லை."

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு நடாத்திய மதநல்லிணக்கப் பயிற்சியில் கலந்து கொண்ட களுத்துறை மாவட்டம் மதுகம பிரதேசத்தைச் சேர்ந்த அறநெறி மற்றும் மறைப் பாடசாலை மாணவர்கள், இவ்வாறு தங்கள் குரலை ஒன்றிணைத்து, தற்போது நடைபெற்று வரும் யுத்தத்துக்கு எதிரான தங்களது சிந்தனைகளையும் அமைதிக்கான ஆழமான விருப்பத்தையும் வெளிப்படுத்தினர்.



# உலகின் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழா





**( ஐ. ஏ. காதிர் கான் )**

உலகின் முதல் பெண் பிரதமரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவியுமான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழா (17) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விசேட நினைவு நிகழ்வில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, சிரேஷ்ட உப தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா (பா.உ.), கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

1916 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதியன்று, இரத்தினபுரி நகரில் பிறந்த ஸ்ரீமாவோ ரத்வத்தே டயஸ் பண்டாரநாயக்க, 1960 ஆம் ஆண்டு இலங்கையின் முதல் பெண் பிரதமராக, கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல தேர்தல் தொகுதியில் பதவியேற்றதன் மூலம், "உலகின் முதல் பெண் பிரதமர்" என்ற வரலாற்றுப் பெருமையைச் சூட்டிக் கொள்கின்றார்.

தனது நீண்ட அரசியல் அனுபவத்தின் மூலம், மூன்று முறை நாட்டின் பெண் பிரதமராகவும் அத்தனகல்ல தொகுதியில் பணியாற்றியுள்ளார்.

தேசத்தின் முன்னேற்றத்திற்காகவும், பல்வேறு காத்திரமான கொள்கைகளை முன்னெடுத்து கடைபிடித்த சிறந்த தலைவியாகவும் அவர், வரலாற்றில் பேரும் புகழும் பெற்று போற்றப் படுகிறார்.

# உதயம் பத்திரிகை

## சமூக உணர்வை எழுப்பும் சக்திவாய்ந்த ஊடகம்

**(வாசகர் பார்வை)**

இன்றைய வேகமான உலகில் தகவல்களை மக்களிடம் துல்லியமாகவும், நேரத்திற்குள் கொண்டு சேர்க்கும் ஊடகங்களில் "உதயம்" பத்திரிகை முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது.

தமிழ் மொழியில் வெளிவரும் இப்பத்திரிகை, உள்ளூர் மற்றும் சர்வதேச செய்திகளை இணைத்து வழங்கும் திறமையால் வாசகர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது.

2026 ஏப்ரல் 13 ஆம் தேதியிட்ட பதிப்பில் உலக அரசியல் பதற்றங்கள் முதல் கல்விச் சாதனைகள் வரை பல்வேறு துறைகள் விரிவாக செய்தியாக வெளியிடப்பட்டுள்ளன.

* சர்வதேச அரசியல் - ஆழமான பகுப்பாய்வு

உலக அரசியல் நிலவரங்களைத் தெளிவாக விளக்கும் வகையில், அமெரிக்கா, ஈரான், இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கிடையிலான பதற்றங்கள் மற்றும் போர்நிறுத்த முயற்சிகள் முக்கிய செய்தியாக இடம்பெற்றுள்ளன.

இத்தகைய செய்திகளின் மூலம், உலகில் நடைபெறும் முக்கிய மாற்றங்களை வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது.

*உள்ளூர் செய்திகள் - சமூகத்தின் பிரதிபலிப்பு

உதயம் பத்திரிகை இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக நிகழ்வுகளை விரிவாக வெளிப்படுத்துகிறது.

*மாணவர்களின் கல்விச் சாதனைகள்
*அரசாங்கத் திட்டங்கள்
*ஊடக வளர்ச்சி முயற்சிகள்

இவை அனைத்தும் சமூக முன்னேற்றத்தின் பிரதிபலிப்பாக அமைகின்றன.

* கல்வி & இளைஞர்கள் - எதிர்காலத்திற்கு ஊக்கம்

மாணவர்களின் வெற்றிக் கதைகள் மற்றும் கல்வி தொடர்பான செய்திகள் முக்கிய இடம் பெறுகின்றன. இது இளைஞர்களுக்கு ஊக்கமாக அமைகிறது.

*ஆசிரியர் கட்டுரை - சிந்திக்க வைக்கும் குரல்

உதயம் பத்திரிகையின் ஆசிரியர் பகுதி அதன் முக்கிய பலமாகும்.

*உலக அரசியல் விமர்சனம்
*மனித உரிமைகள்
*சமூக அநீதிகள்

இந்தக் கட்டுரைகள் வாசகர்களை ஆழமாக சிந்திக்க வைக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள

*சமூகப் பொறுப்பு- மக்களின் குரல்

உதயம் பத்திரிகை வெறும் செய்தி வழங்கும் ஊடகம் அல்ல.

*அது சமூக அநீதிகளை வெளிச்சம் போடுகிறது
*பொதுமக்களின் பிரச்சினைகளை முன்வைக்கிறது
*அரசியல் விழிப்புணர்வை உருவாக்குகிறது
* E-Paper – உலகம் முழுவதும் அணுகல்

இப்பத்திரிகை இணைய வழியாகவும் (E-Paper) வெளியிடப்படுவதால் உலகம் முழுவதும் உள்ள தமிழ் வாசகர்களை சென்றடைகிறது.

*முடிவு

"உதயம்" பத்திரிகை என்பது தகவல்களை மட்டும் வழங்கும் ஊடகம் அல்ல் அது சமூக மாற்றத்திற்கான ஒரு சக்தியாக திகழ்கிறது. உண்மைச் செய்தி, ஆழமான பகுப்பாய்வு, மற்றும் சமூக பொறுப்பு ஆகியவற்றின் மூலம் இது தமிழ் ஊடக உலகில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

"உண்மை பேசும் ஊடகம் - உதயம்"

**மீராலெவ்வை அவ்பர்**
**கஹட்டோவிட்ட.**

# நீர் இன்றி அமையாது உலகு!




நாச்சியாதீவு
பர்வீன்
(தேசிய நீர்வழங்கல்
வடிகாலமைப்பு சபை)

**நீரின் மகத்துவம்:-**

நீர்வளம் என்பது மிகவும் பெறுமதி மிக்க ஒரு இயற்கையின் கொடையாகும். அதனால்தான் உலகில் உள்ள உயிர்கள் அனைத்திற்கும் அடிப்படைத் தேவையாக நீர் விளங்குகிறது. நீர் உலகின் உயிர் நாடியாகும். எந்த உயிரினமாக இருந்த போதிலும், அவ்வுயிரினம் உயிர்வாழ நீரின் தேவை இன்றியமையாததாகும். மனிதன், விலங்கு, தாவரம் என அனைத்தும் வாழ்வதற்கு நீர் அத்தியாவசியமாகிறது. குடிநீர் தேவைகளிலிருந்து விவசாயம், தொழில்துறை, மின்சக்தி உற்பத்தி, சுகாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு வரை அனைத்துத் துறைகளிலும் நீரின் பங்கு அளவற்றது. உலகின் பெரும் நாகரிகங்கள் அனைத்தும் – சிந்துவெளி நாகரிகம், நைல் நதி நாகரிகம், மெசபடோமியா நாகரிகம் – நதிக்கரைகளிலேயே தோன்றின என்பது நீரின் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்துகிறது. மனித நாகரிகத்தின் வளர்ச்சியே நீர்மூலமே உருவானது என்று தைரியமாகக் கூறலாம்.

நீரின் பன்முக பயன்கள்

மனித வாழ்வோடும் மனித நாகரிகத்தோடும் ஒன்றிணைந்த நீரின் பயன் வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியாததாகும். நீரின் தேவையும் பயனும் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் வெளிப்படுகிறது. விவசாயத்தில் பயிர்கள் செழித்து வளர நீர் அவசியம். உலக உணவு உற்பத்தியில் சுமார் 70 சதவீதம் நீர்ப்பாசனத்தை சார்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தொழிற்சாலைகளில் உற்பத்தி நடைபெறவும், மின் நிலையங்களில் மின்சாரம் உற்பத்தி செய்யவும் நீர் முக்கியப் பங்கு வகிக்கிறது. சுகாதாரத் துறையில் தூய்மையும்



நோய்தடுப்பும் நீரின் மூலமே சாத்தியமாகிறது. உடலில் நீர்ச்சத்து குறையும்போது மனித உடல் இயக்கம் பாதிக்கப்பட்டு நோய்கள் உருவாகின்றன. ஆகவே நீர் மனித வாழ்வின் ஆதாரமாகத் திகழ்கிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

**நீர்வளம் சுருங்கும் ஆபத்து:-**

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நீரைப் பாதுகாப்பது இன்றைய உலகின் மிகப்பெரிய பொறுப்பாக மாறியுள்ளது. மக்கள்தொகை அதிகரிப்பு, நகரமயமாக்கல், காடழிப்பு, தொழிற்சாலைக் கழிவுகள், பிளாஸ்டிக் மாசு, காலநிலை மாற்றம் போன்ற காரணங்களால் நீர்வளங்கள் நாளுக்கு நாள் மாசடைந்து குறைந்து வருகின்றன. ஆறுகள், ஏரிகள், நிலத்தடி நீர் ஆகியவை பாதுகாக்கப்படாவிட்டால், எதிர்காலத்தில் குடிநீருக்கே கடும் தட்டுப்பாடு ஏற்படும்.

நீர்வளம் இல்லாமல் ஆப்பிரிக்க நாடுகள் படும் அவஸ்தையை நாம் ஊடகங்கள் மூலம் அறிகிறோம். குடிப்பதற்கான நல்ல நீரைப் பெற்றுக்கொள்வதில் தெற்காசிய நாடுகளில் கூட இன்னும் சிரமம் இருக்கிறது. உலகில் மிகப்பெரும் பகுதி நீராக இருந்த போதிலும், அவற்றில் 97 சதவீதம் உப்பு நீராகவும், 2 சதவீதம் பனிப்பாறைகளிலும் உறைந்திருக்கிறது. மனிதனுக்குப் பயன்படும் நல்ல நீர் வெறும் 1 சதவீதம் மட்டுமே என்பது அதிர்ச்சி அளிக்கும் உண்மையாகும்.

**நீர் இல்லாத உலகு :-**

நீர்வளம் இல்லாத ஒரு உலகை கற்பனை செய்தாலே அச்சம் ஏற்படுகிறது. விவசாயம் அழிந்து உணவுப் பற்றாக்குறை ஏற்படும். நோய்கள் பரவி மனித வாழ்க்கை சிரமப்படும். காடுகளும் வனவிலங்குகளும் அழிந்து இயற்கை சமநிலை சீர்குலையும். நீரின்மையால் நாடுகளுக்கிடையே மோதல்கள் கூட உருவாகலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர். மனித நாகரிகமே நிலைநாட்ட முடியாத நிலைக்கு தள்ளப்படும்.

நாம் செய்ய வேண்டியவை

நீரைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாது, அதைச் சேமிப்பதும் மிக அவசியமானதாகும். நாம் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய சில எளிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

மழைநீர் சேகரிப்பு – வீடுகள் மற்றும் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகளை நிறுவுதல்.

குழாய் நீர் வீணாக்கல் தவிர்த்தல் – பல் துலக்கும்போது, பாத்திரம் கழுவும்போது குழாயை மூடி வைத்தல்.

சிக்கனமான நீர்ப்பாசனம் – விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசன முறைகளை கையாளுதல்.

கழிவு நீர் சுத்திகரிப்பு – தொழிற்சாலைகளும் வீடுகளும் கழிவு நீரை சுத்திகரித்து மறுபயன்பாட்டில் ஈடுபடுதல்.

நீரை சேமிப்பது தொடர்பிலான விழிப்புணர்வை பரப்புதல் – பள்ளி, கல்லூரிகளில் நீர் சேமிப்பு பற்றிய கல்வியை வலுப்படுத்துதல்.

இன்று நாம் சேமிக்கும் ஒரு துளி நீர் நாளைய தலைமுறையின் வாழ்க்கையைப் பாதுகாக்கும்.

ஒவ்வொரு நீர்த்துளியும் பெறுமிக்கது என்பதை உணர்ந்து, நீரை மதித்துப் பயன்படுத்த வேண்டும். மார்ச் 22 உலக நீர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்நாள் நீரைப் பாதுகாப்பதற்கும் சேமிப்பதற்கும் நம்மை ஊக்குவிக்கும் ஒரு முக்கியமான நினைவூட்டலாகும். ஆனால் நீர் சேமிப்பு ஒரு நாளின் கடமை மட்டுமல்ல – அது நம் ஒவ்வொருவரின் அன்றாட பொறுப்பாகும். "நீர் இன்றி அமையாது உலகு" – இந்த உண்மையை நம் மனதில் பதித்து, நீரை காக்கும் உறுதிப்பாட்டுடன் வாழ்வோம்!

# முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் திருத்தங்களை முன்மொழிந்துள்ள தேசிய சூரா சபை

2026 ஜனவரி 13 ஆம் திகதி நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சிலிருந்து தேசிய ஷூரா சபைக்கு அனுப்பப்பட்டிருந்த கடிதத்தில் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பான விதந்துரைகளை முன்வைக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு இணங்க தேசிய ஷூரா சபை அதன் நிறைவேற்று குழு செயலகக் குழு மற்றும் சில முக்கிய சிவில் அமைப்புக்களது ஆலோசனைகளைப் பெற்று இந்த முன்மொழிவுகளைக் கொண்ட அறிக்கை ஒன்றை தயாரித்தது. அது தேசிய ஷூரா சபையின் உறுப்பு அமைப்புகள் அனைத்துக்கும் அனுப்பப்பட்டதுடன் அவர்களது அங்கீகாரமும் அதற்காக பெறப்பட்டிருப்பதும் குறிப்பிடப்பட்டதாகும்.

அது மாத்திரமன்றி இலங்கையின் முன்னணி உலமாக்கள் சிலருக்கு இந்த முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு அவர்களது ஆலோசனைகளும் பெறப்பட்டு இறுதி வடிவத்தை அது பெற்றதுடன் அவர்களது அங்கீகாரமும் அந்த அறிக்கைக்கு கிடைத்துள்ளது. மேற்படி அறிக்கை கடந்த 15.04.2026 அன்று நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டது.

**தேசிய ஷூரா சபையால் முன்மொழியப் பட்டுள்ள முக்கிய பரிந்துரைகள்:**

திருமண வயது 18 ஆக நிர்ணயம்:

இலங்கையின் ஏனைய சமூகங்களுக்கு இணையாக, முஸ்லிம் ஆண் மற்றும் பெண்ணின் குறைந்தபட்ச திருமண வயது 18 ஆண்டுகளாக இருக்க வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது. விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரம், 16-18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு காழி நீதிபதிகள் குழுவின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

மணமகளின் கையொப்பம் கட்டாயமாக்கல்:

திருமணப் பதிவின் போது மணமகனின் கையொப்பத்துடன், மணமகளும் தனது சம்மதத்தை உறுதிப்படுத்தி கையொப்பமிடுவதற்கான இடம் திருமணச் சான்றிதழில் ஒதுக்கப்பட வேண்டும். இது பெண்களின் சுதந்திரமான தெரிவை உறுதிப்படுத்தும் ஒரு முக்கிய நகர்வாகும்.

**பலதார மணத்திற்கு முறையான கட்டுப்பாடுகள்:**

இஸ்லாத்தில் பலதாரமணம் செய்து கொள்வதற்கான அனுமதி ஆணுக்கு வழங்கப்பட்டுள்ளது.ஆனால் பலதாரமணம் புரிய விரும்பும் ஒருவர், தனது மனைவியர் அனைவரையும் சமமாக நடத்துவார் என்பதற்கான உறுதிப் பிரமாணத்தை (Solemn Declaration) காழி நீதிபதிகள் குழுவிடம் வழங்க வேண்டும். இதனை மீறுபவர்களுக்கு எதிராக சிவில் நீதிமன்றத்தில் நட்டஈடு கோரும் அதிகாரம் பாதிக்கப்படும் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

**நவீனமயப்படுத்தப்பட்ட காழி நீதிமன்றங்கள்:**

தற்போதைய காழி நீதிமன்ற முறையை மாற்றி, முழு நாடும் ஒன்பது வலயங்களாகப் பிரிக்கப்பட்டு தலா ஒவ்வொரு வலயத்திற்கும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட 'காழி நீதிபதிகள் குழு' அமைக்கப்பட வேண்டும்.இந்த ஐவரில் மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் அங்கம் வகிப்பர்.ஆண் ஒருவர் பிரதம காழியாக செயற்படுவதோடு இறுதி தீர்மானத்தையும் எடுப்பார்.இவர்கள் முழுநேர அடிப்படையில் பணியாற்றி, விவாகரத்து மற்றும் பிள்ளைகளின் பராமரிப்பு தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பார்கள்.

மேற்படி அறிக்கைக்கு தேசிய ஷூரா சபையின் பின்வரும் முன்னணி முஸ்லிம் சிவில் அமைப்புகள் தமது அங்கீகாரத்தை வழங்கியுள்ளன.

**1. தேசிய ஷூரா சபை**
**2. அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணிகளின் சம்மேளனம்**
**3. அகில பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் சங்கம்**
**4. . இலங்கை மலாய் மக்களின் மாநாடு**
**5. . ஸ்ரீலங்கா ஜமாஅதே இஸ்லாமி**
**6. . இலங்கை கதீப்கள் மற்றும் முஅத்தின்கள் சங்கம்**
**7. . ஸலாமா சங்கம்**
**8. அல்முஸ்லிமாத்**
**9. இஸ்லாமிய கற்கைகளுக்கான நிலையம்**
**10. அஹதிய்யா சம்மேளனம்**
**11. அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத்**
**12. சிலோன் முஸ்லிம் வாலிபர் சங்கம்**
**13. நாம் இலங்கையர் அமைப்பு**

**இவ்வறிக்கைக்கு ஒப்புதல் வழங்கிய உலமாப் பெருமக்களது பெயர்கள்:**

* அஷ்-ஷேக் கலாநிதி ஆ.டு. முபாரக் (PhD) - பணிப்பாளர், தாருல் ஹுதா மகளிர் அரபு மற்றும் இஸ்லாமியக் கல்லூரி, மருதமுனை.

*அஷ்-ஷேக் M.M.M. கரீம் (நத்வி) - அதிபர், நத்வதுல் உலமா அரபுக் கல்லூரி மற்றும் தலைவர், மஜ்லிஸ் ஷூரா - மூதூர்.

*அஷ்-ஷேக் மஃஸூக் ஷஜீர் (உஸ்வி) - அதிபர், தாருல் கிராஅத் அரபுக் கல்லூரி, மாபோலை.

*அல்-ஆலிமா டாக்டர் மரீனா தாஹா ரிபாய் - ஸ்தாபகத் தலைவி, அல்-முஸ்லிமாத்.



*அஷ்-ஷேக் பேராசிரியர் கலாநிதி S.M.M. மஸாஹிர் - பேராசிரியர் (இஸ்லாமிய கலாசாரம்), இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.

*அஷ்-ஷேக் பேராசிரியர் து.னு. கரீம்தீன் - பேராசிரியர் (சமூகவியல் கல்வி), இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

*உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

*அஷ்-ஷேக் S.H.M. பளீல் (BA, MA, MPhil) - சிரேஷ்ட விரிவுரையாளர், ஜாமிஆ நளீமியா, பேருவளை.

*அஷ்-ஷேக் அல்-ஹாபிஸ் கலாநிதி A.J.M. மக்தூம் (PhD) - உதவிப் பேராசிரியர் (AOP) மற்றும் வருகைதரு விரிவுரையாளர் (கொழும்பு பல்கலைக் கழகம்), ஃபத்வா குழு உறுப்பினர் (அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா).

*அஷ்-ஷேக் கலாநிதி ரவூப் ஸெய்ன் (Ph.D) - சிரேஷ்ட ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் கல்வியியலாளர்,சிரேஷ்ட விரிவுரையாளர் (குஐஉநு).

*அஷ்-ஷேக் M.T.M. ரிஸ்வி (மஜீதி) - BA(Hons), PGDE, CTHE, MA, MPhil, PhD (Rd). சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

*அஷ்-ஷேக் M. ஃபகீஹுதீன் (நளீமி) - BA, செயலாளர் (CDASF), பிரதம நிறைவேற்று அதிகாரி (Life Bond Foundation).

*அஷ்-ஷேக் A.M.M. ஆஸாத் (நளீமி) - MA (சூடான்), தலைவர், ஸலாமா அமைப்பு (Salamah Society).

*அஷ்-ஷேக் முஹம்மத் சாலி முஹம்மத் தாஸிம் (கஃபூரி) - தலைவர், சிலோன் முஸ்லிம் இளைஞர் சங்கம் (AMYS).

*அஷ்-ஷேக் அப்துஸ் ஸமத் முஹம்மத் அக்ரம் (நளீமி, ஆயு)

*அஷ்-ஷேக் கலாநிதி M.I.M. சித்தீக் (PhD) - சிரேஷ்ட விரிவுரையாளர், உம்மு தர்தா மகளிர் இஸ்லாமியக் கல்லூரி, அக்கரைப்பற்று.

*அஷ்-ஷேக் கலாநிதி A.P.M. அப்பாஸ் (நளீமி) - PhD (மலேசியா), தலைவர் (தர உறுதிப்படுத்தல் பிரிவு) சிரேஷ்ட விரிவுரையாளர், ஜாமிஆ நளீமிய்யா.

*அஷ்-ஷேக் அல்-ஹாபிஸ் கலாநிதி முஹம்மத் இஸ்மத் ரம்ஸி (நளீமி) - சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வி பீடம், மலாயா பல்கலைக்கழகம், மலேசியா.

*அஷ்-ஷேக் கலாநிதி L.M. முபீத் - PhD (அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகம், எகிப்து). சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் மற்றும் பொருளியலாளர், அறக்கட்டளை மற்றும் இஸ்லாமிய விவகாரங்கள் அமைச்சு - கத்தார்.

*அஷ்-ஷேக் A.M. ஹிதாயத்துல்லாஹ் (நளீமி) - BA, PGDE, M.Ed., Dip in Couns., சிரேஷ்ட ஆலோசகர்.

*அஷ்-ஷேக் M.S. அப்துல் முஜீப் (கஃபூரி)

*அஷ்-ஷேக் கலாநிதி M.J.M. அரபாத் கரீம் (நளீமி) - தலைவர் (கல்வி விவகாரங்கள்), ஜாமிஆ நளீமியா.

*அஷ்-ஷேக் கலாநிதி M.F. முஹம்மத் ஸகீ - உதவிப் பேராசிரியர், அரசறிவியல் மற்றும் மதனீ கற்கைகள் துறை, சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகம், மலேசியா.

*அஷ்-ஷேக் M.I. அப்துல் ஜப்பார் (பஹ்ஜி)

*அஷ்-ஷேக் முஹம்மத் யூனுஸ் சம்சு தப்ரீஸ் (அஹதி)


*அஷ்-ஷேக் நாஹுர் ரஹீம்

இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படை நெறிமுறைகளை மீறாமல் இஸ்லாத்தின் நெகிழ்ச்சித் தன்மைக்கு ஏற்ப நாட்டின் சட்டதிட்டங்களையும் கருத்தில் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் தேசிய ஷூரா சபை தெரிவித்துள்ளது.

-ஊடகப் பிரிவு
தேசிய ஷூரா சபை



# ஹோர்மூஸில் அமெரிக்க அத்துமீறலும் ஈரானின் பிடிவாதமும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

அமெரிக்கா ஈரான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த நிலையிலும் அமெரிக்கா ஈரானுக்கு ஐந்து நிபந்தனைகளை வழங்கி இருக்கின்றது. அந்த நிபந்தனைகளை ஏற்று மீண்டும் பேச்சுவார்த்தை களுக்கு வந்தால் பேசலாம். இன்றேல் நிலைமை தலைகீழாக மாறும் என்று ட்ரம்ப் அறிவித்திருந்தார். அத்துடன் பாகிஸ்தானில் இருந்து தூதுக்குழு ஒன்று ஈரானுக்கு விஜயம் செய்து மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு புத்துயிரளிக்க முயற்சிகளை எடுத்து வருகின்றது. இதற்கிடையில் 2026.04.13 ஆம் திகதி அமெரிக்க நேரப்படி காலை 10.00 மணிக்கு அமெரிக்கா இந்துசமுத்திர மற்றும் வளைகுடா பிராந்தியத்தில் இருந்த 11 அதி சக்திவாய்ந்த போர்க் கப்பல்களை ஹோர்மூஸ் கால்வாயை அண்மித்த பகுதிக்கு அனுப்பி ஈரான் துறை முகத்திற்கு செல்லும் கப்பல்களையும் ஈரானில் இருந்து வெளியில் ஹோர் மூஸ் வழியாக வரும் கப்பல்களையும் தடைசெய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


குறிப்பாக ஈரானின் பந்தர் அப்பாஸ் துறைமுகம், சுபாஹா மற்றும் ஜாஸ்க் துறைமுகங்களை சுற்றி வளைத்து ஈரானுக்கு பாரிய பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி இருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்த முற்றுகை தொடருமானால் ஈரானுக்கு ஒருநாளைக்கு சுமார் 10,000 கோடி ஷரூபாய்கள் நஷ்டம் ஏற்படவிருக்கின்றது. நாளாந்தம் 40 இலட்சம் பீப்பாய்கள் எண்ணெய் ஏற்றுமதிக்கு பாதிப்பு ஏற்பட இருக்கின்றது. அத்துடன் இந்த துறைமுகங்கள் மூலமாக ஈரானின் 90 வீதமான வெளிநாட்டு வர்த்தகம் நடைபெற்று வருகின்றன. அமெரிக்கா வின் இவ்வாறான முற்றுகை தொடருமானால் ஈரானுக்கு மாதத்திற்கு சுமார் 300,000 கோடி ஷரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டு பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படலாம். இவ்வாறான ஒரு இழப்பு ஏற்பட்டால் ஈரானை இலகுவாக தலைகுனிய வைத்து யுரேனியம் செறிவூட்டலை தடுத்து நிறுத்தி அணு ஆயுத உற்பத்தியை தடுக்க முடியும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தரப்பு எதிர்பார்க்கின்றது.

அதே நேரம் ஈரான் மீண்டும் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு வரலாம். அடுத்த பேச்சுவார்த்தை ஒன்றில் பாகிஸ்தானில் அல்லது ஜெனீவாவில் நடைபெறலாம். அத்துடன் இந்த பேச்சுவார்த்தையின் போது ஈரான் ஐந்து வருடங்களுக்கு யுரோனியம் செறிவூட்டலை நிறுத்திக்கொள்ள விரும்புவதாக அறிவித்திருப்பதாகவும் அமெரிக்கா அவ்வாறு முடியாது 20 அல்லது 30 வருடங்களுக்கு அந்த நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று கோரி இருப்பதாகவும் சர்வதேச ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எவ்வாறோ அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் நடவடிக்கைகளை சர்வதேச நாடுகள் பல வன்மையாக கண்டித்து வருகின்றன. அமெரிக்க ஜனாதிபதியின் ஹோமூஸ் முற்றுகை நடவடிக்கையானது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தலாம். ஏற்கனவே அமெரிக்கா இந்த யுத்தம் காரணமாக 250 பில்லியன் அமெரிக்க டாலர்களை நாசம் செய்து இழந்திருக்கி ன்றன. குறிப்பாக தற்போதைக்கு 4000 இலட்சம் கோடி டாலர்களை இழந்து பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் நிலை உருவாகி இருக்கின்றன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்படியான ஒரு நிலையில் அமெரிக்கா அதன் நேச நாடுகளை துணைக்கு அழைத்த போதும் பிரிட்டன் முதல் பல ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவுடன் இந்த நடவடிக்கையில் கைகோர்க்க மறுத்துள்ளன.

அதே நேரம் அமெரிக்காவின் இத்தகைய ஹோமூஸ் முற்றுகையை அமெரிக்கா செய்யும் ஒரு கடல் கொள்ளை என்று வர்ணித்திருக்கின்றது. அமெரிக்காவும் ஈரான் ஹோர்மூஸ் கால்வாயை தடுப்பது பொருளாதார சுரண்டல் என்று தெரிவிக்கின்றது. அதே நேரம் அமெரிக்கா அதன் கடற்படையை பயன்படுத்தி ஹோர்மூஸ் கால்வாயை மீட்கும் நடவடிக்கையில் கடல் போர் ஒன்றை ஆரம்பித்தால் அது அமெரிக்கா வுக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்தலாம். அமெரிக்காவின் ஆழ்கடல் போர் தந்திரோபாயங்கள் ஹோர்மூஸ் கால்வாய்க்கு சரிப்பட்டு வராது என்று போரியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான ஒரு நிலையில் வளைகுடா நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது. பூகோள அரசியலில் இந்த அமெரிக்காவினதும் ஈரானினதும் நடவடிக்கைகள் மிக மோசமான பொருளாதார விளைவுகளை கொண்டு வரக்கூடியதாக மாறி வருகின்றது.

US naval blockade of Iran's ports

The United States has announced it will implement a blockade 'against vessels of all nations entering or departing Iranian ports and coastal areas, including all Iranian ports on the Arabian Gulf and Gulf of Oman'.




ஏற்கனவே முதலாம் இரண்டாம் உலகப் போர் காலத்தில் நாடுகளை இராணுவ மற்றும் கடற்படை பலத்தை கொண்டு கைப்பற்றிய சில கொடுங்கோலர்கள், சர்வாதிகாரிகள் பற்றி வரலாற்றில் நாம் அறிந்திருக்கின்றோம். ஹிட்லர், முசோலினி போன்வர்களுக்கு இந்த வரிசையில் தனியான இடம் இருக்கின்றது.

இருபதாம் நூற்றாண்டில் அந்த வரலாற்றை நினைவு தரும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் செயற்பாடுகள் நினைவு கூறுகின்றன என்றே கூறலாம். எதிர்வரும் நாட்களில் வளைகுடா நிலைமை மேலும் மோசமடைந்தால் இந்த ஹோமூஸ் கால்வாய் ஊடாக நடைபெற்று வரும் சர்வதேச வர்த்தகம் பாதிக்கப்படலாம். அதிலும் ஈரானின் சர்வதேச வர்த்தகத்தை முடக்கி அடிபணியச் செய்யலாம் என்பதே ட்ரம்பின் எதிர்பார்ப்பாகும். அதற்கு தலைகுனிந்து ஈரான் இடமளிக்குமா என்பதே கேள்வியாக இருக்கின்றது.


ஏற்கனவே அமெரிக்காவின் திட்டமாக இருந்தது ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியின் பிரதான தளமாக இருந்து வரும் காஸ் தீவைகைப்பற்றுவதாக இருந்தது. இதற்கிடையில் நிலைமை திசைமாறி ஹோமூஸ் கால்வாயை முற்றுகையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டிருக்கின்றது. இந்த இரண்டு நடவடிக்கையினதும் பின்னணியாக அமைவது ஈரானின் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆகிய சக்தி வளத்தை கைப்பற்றி சூரையாடுவதாகும். வெறுமனே சர்வதேசத்தை ஏமாற்றி திசை திருப்புவதற்காக சொல்லப்பட்ட ஒரே விடயமாக ஈரானிடம் அணு ஆயுதம் இருக்கின்றது யுரேனியம் செறிவூட்டல் நடைபெறுகின்றது என்பதாகும். அதே நேரம் இந்த ஆக்கிரமிப்பின் மற்றொரு இலக்காக அமைவது இஸ்ரேலை பாதுகாப்பான நாடாக மாற்ற வேண்டுமானால் வளைகுடாவில் உள்ள எல்லா முஸ்லிம் நாடுகளதும் முதுகெலும்பை முறிக்க வேண்டும் அல்லது அமெரிக்காவின் அடிவருடி நாடுகளாக மாற்றியமைக்க வேண்டும்.

அந்த நடவடிக்கைக்கு விலைபோகாமல் அமெரிக்காவின் அனைத்துவிதமான ஆக்கிரமிப்பு போக்கை கண்டித்து எதிராக சவால் விட்டு வரும் ஒரு நாடு ஈரானாகும். அதனால் எப்படியாவது எவ்வளவு விலை கொடுத்தாவது ஈரானை அழித்து துவம்சம் செய்ய வேண்டும் என்பதே ட்ரம்பின் திட்டமாகும். அதற்காகவே இந்த நாடகம் அரங்கேற்றப் பட்டிருக்கின்றது

ஆனாலும் அந்த செயலால் உலக அரங்கில் எண்ணெய் விலையேற்றம் மிகமோசமான பாதிப்பை ஏற்படுத்தலாம். அத்துடன் வளைகுடாவில் உள்ள ஏனைய நாடுகளது கப்பல்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளன.

அமெரிக்கா ஈரானுக்குள் போகும் மற்றும் அங்கிருந்து வரும் கப்பல்களுக்கு மாத்திரமே தடையும் இடையூறும் ஏற்படும் என்று அறிவித்திருந்தாலும் அப்பிராந்தியத்தால் செல்லும் ஏனைய வர்த்தக வாணிப சரக்கு கப்பல்களுக்கு யார் பாதுகாப்பு வழங்குவது, தாக்குதல்களால் பாதிப்பு ஏற்பட்டால் இழப்பீடு வழங்குவது அமெரிக்காவா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. இதற்கிடையில் லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ச்சி யான தாக்குதல்களை நடத்தி வருவதால் வளைகுடா பிராந்தியத்தில் மேலும் பதற்றம் அதிகரித்துள்ளன. இந்த தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வருவதற் கான பேச்சு வார்த்தைகளும் நடைபெற்றாலும் இதுவரையில் திருப்திகரமான முன்னேற்றங்கள் எதுவும் எட்டப்படவில்லை.

இதற்கிடையில் வளைகுடா பிராந்திய நாடுகளை ஒன்றிணைத்ததாக ஈரானுக்கு எதிரான ஒரு அரபு அணியை உருவாக்குவது அமெரிக்கா வினது மற்றொரு திட்டமாகும். அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடக அறிக்கைகள் கூறுகின்றன. பிராந்தியத்தில் ஈரான் இந்த யுத்தம் காரணமாக பலமடைந்த தேசமாக மலரும் தருவாயில் அது அசைக்க முடியாத பலமாக மாற இடமிருக்கின்றது. அந்த சந்தர்ப்பத்தில் ஏனைய அரபு நாடுகளான சவுதி அரேபியா, குவைட், ஐக்கிய அரபு இராச்சியம், கடார், ஓமான் போன்ற நாடுகளுக்கு அது அச்சுறுத்தலாக அமையலாம் என்ற ஒரு மாயை காட்டப்பட்டு ஈரானுக்கும் ஏனைய அரபு நாடுகளுக்கும் இடையில் நிலவி வருகின்ற இஸ்லாமிய கோட்பாட்டு ரீதியான பிளவை வளர்த்து பிரிவினையை உக்கிரமடையச் செய்தால் ஈரானை சர்வதேச அரங்கில் தனிமைப் படுத்தலாம் என்ற நிலைப்பாடும் இருந்து வருகின்றது. எவ்வாறாயினும் சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் ஈரானுக்கு வழங்கி வருகின்ற ஆதரவு அமெரிக்காவுக்கு பலத்த அடியாகும்.



# சுகாதார மேம்பாட்டு குழு உறுப்பினர்களுக்கான பதவி ஏற்பு வைபவமும் சின்னம் சூட்டும் நிகழ்வும்









**(ஏ.எச்.ஹஸ்பர்)**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், திஹாரிய தாருஸலாம் ஆரம்பப் பாடசாலையில் 2026 ஆம் ஆண்டிற்கான மாணவத் தலைவர்கள் மற்றும் சுகாதார மேம்பாட்டு குழு உறுப்பினர்களுக்கான பதவி ஏற்பு வைபவமும் சின்னம் சூட்டும் நிகழ்வும் (09) தாருஸலாம் ஆரம்பப் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் கல்லூரியின் அதிபர் எம்.ஐ. அஸ்மின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கம்பஹா களனி வலய தமிழ் மொழிப் பிரிவு பாடசாலைகளின் பிரதிக் கல்வி பணிப்பாளர் எம்.டி.எம். தௌசீர் கலந்து சிறப்பித்தார்.

மேலும், கௌரவ அதிதியாக ஆசிரிய ஆலோசகர் எம்.ஐ.எம். ஷரூமி கலந்து கொண்டதுடன், விசேட அதிதியாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மகீன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

அத்துடன், சிறப்பு அதிதியாக அத்தனகல்லை பிரதேச சபை உறுப்பினர் பாயிஸ் அவர்கள் கலந்து கொண்டதுடன், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர்.

# சிங்கப்பூரில் உயரிய “ஜமாலியன் விருது” பெற்றார் ‘புதிய நிலா’ K. ஜஹாங்கீர்



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சிங்கப்பூரில் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக தொண்டூழிய, சமூக நலப்பணியாற்றி வரும் எழுத்தாளர், பேச்சாளர், இதழாசிரியர், முஸ்லிம் லீக் (சிங்கப்பூர்) சங்கத்தின் தலைவர், ‘புதிய நிலா’ மு. ஜஹாங்கீரின் சேவைகளைப் பாராட்டி, ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தினரால் (சிங்கப்பூர் கிளை) உயரிய “ஜமாலியன் விருது” வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கல்விமான்கள், புத்திஜீவிகள் என பல்துறை சார்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இந்த உயரிய ஜமாலியன் விருதானது இவ்வாண்டு புதிய நிலா மு. ஜஹாங்கீருக்கு வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற நியமன உறுப்பினர் டாக்டர் ஹரேஷ் சிங்கராஜூ, இவ்விருதை வழங்கிக் கௌரவித்தார்.

அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள் எனப் பலதரப்பட்டோரும் உயரிய “ஜமாலியன் விருது” பெற்ற ‘புதிய நிலா’ மு. ஜஹாங்கீர், மேலும் மேலும் பல சேவைகள் புரிந்து, சமூக நலப் பணியாற்றி, நீடூழி காலம் வாழ வேண்டுமென வாழ்த்தி, தமது பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

# புத்தளம் சிராம்பையடியில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட வீட்டிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு



**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

புத்தளம் சிராம்பையடி கிராம உத்தியோகத்தர் பிரிவில் டித்வா புயலால் முழுமையாக பாதிக்கப்பட்ட வீட்டிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு சனிக்கிழமை (18) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம். பைசல், புத்தளம் பிரதேச சபை உறுப்பினர் இஷார பீரிஸ், கிராம உத்தியோகத்தர் மற்றும் புயலால் முழுமையாக பாதிக்கப்பட்ட பயனாளிகள் பலரும் கலந்து கொண்டனர்.

டித்வா புயல் காரணமாக புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளுக்கான முதல் கட்ட காசோலை வழங்கும் நிகழ்வு புத்தளம் பிரதேச செயலக பிரதான மண்டபத்தில், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரத்ன தலைமையில் கடந்த வாரம் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவாவின் மக்கள் குறைகேள் தினம்



**இஸட் .ஏ.றஹ்மான்**
**(ஒலுவில் விசேட செய்தியாளர்)**

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா அவர்கள் நேரடியாக பங்கேற்ற “மக்கள் குறைகேள் தினம்” 2026.04.18 ம் திகதி ஒலுவில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தில் நடைபெற்றது.

வருகை தந்த பொது மக்கள் தங்களது குறைகள், கோரிக்கைகளை தெரிவித்து எழுத்து மூலமாக ஆவண ரீதியாக பாராளு மன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவிடம் நேரடியாக முன்வைத்தனர்.

# போதைப்பொருள் ஒழிப்பு, ஊடக, கலை, இலக்கிய வழிகாட்டல் செயலமர்வு!







**(ஏ.எச.ஹஸ்பர்)**

திருகோணமலை வாசல் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளுக்கான போதைப்பொருள் ஒழிப்பு, ஊடக, கலை, இலக்கிய வழிகாட்டல் செயலமர்வு (16) மாங்காயூற்று முதியோர் சங்க ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.அச்சுதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் உறுப்பினர் பிலிப்ஜோன் விஷோபா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

இச்செயலமர்வில், வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.அச்சுதன், வாசல் வாசகர் வட்டத்தின் செயலாளர் மற்றும் வாசல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன், கவிஞர் தில்லைநாதன் பவித்ரன், சட்டத்தரணி ஷிறோமி ரவீந்திரராஜா ஆகியோர் வளவாளர்களாக பங்கேற்று தெளிவூட்டல்களை வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில், மாங்காயூற்று, கன்னியா பிரதேசங்களை சேர்ந்த இளைஞர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அருவிக்கரை



நாச்சியாரீவு பர்வீன்

# சுக விசாரணை

நண்பர்கள் உறவினர்கள்
நம் சொந்தம் என்போர்கள்
அறிந்தவர்கள் தெரிந்தவர்கள்
அத்தனை ரகத்தோரும்
வியாதிக்குள் ளாயிருந்தால்
விசாரித்தல் நம் கடனே

சேமம் விசாரிக்க
செல்லும் இடங்களிலே
ஆறுதல் மட்டும்தான்
அவர்களுக்குச் சொல்ல
வேண்டும்
கூறு போட்டு பொருள் விற்க
குறித்த இடம் அதுவல்ல

வேறு கதை அளத்தல்
வினாத் தொடுத்து வதை
செய்தல்
சாறாய்ப் பிழிந்தவரை
சங்கடத்துக் குட்படுத்தல்
ஆகாது ஆகாது
ஆரோக்யம் இல்லை அவை

வருத்தத்தை விசாரிக்க
வைத்தியர் இருக்கின்றார்
வைத்தியத் தனமாய் யாரும்
பரீட்சை வைக்கத் தேவையில்லை

வந்தோம் பார்த்தோம்
வாய் மூடி இருந்தோம்
தேனீர் குடித்தோம்
திரும்பினோம் என்றில்லாமல்
வம்பளந்து வாயுராவும்
வழமை அது நல்லதல்ல

நோயால் உடல் உள்ளம்
நொந்து போய் இருப்பவனை
பேய் போல் பயம் காட்டும்
பிற் போக்குத் தனம் வேண்டாம்

ஆறாத நோய் உன்னை
ஆட்கொண்டு விட்டதென
கூறாதே கூறாதே
கொடுமை அது பெருங்கொடுமை

வாயிலிருந்து
வருகின்ற வார்த்தையதோ
கோயில் பிரசாதம்போல்
கொஞ்சமாய் இருக்க வேண்டும்
நோயில் இருந்த வரை
நூதனமாய் மீட்க வேண்டும்

வருத்தம் குணமாகும்
வருந்தாதே மனிதா என்று
ஆறுதல் கூறுவதும்
அவனுக்காய்ப் பிரார்த்திப்பதுமே
ஆறறிவு மனிதப் பண்பு

அதைவிடுத்து
ஊரெல்லாம் இந்த நோய்தான்
உனக்கு இப்போ வந்த நோய்தான்
காசை இறைத்தாலும்
கரையேறல் கஷ்டமென்று
பேசத் தொடங்குவது
பிழையான அணுகுமுறை

ஆம்! சுகமில்லாரிடத்தில்
சுகத்தை மட்டும்தான்
சுருக்கமாய் வினவ வேண்டும் மாறாக
விடுத்து விடுத்து
வியாதியைப் பற்றியே
விசாரித்தல் அறிவீனம்

ஆகவே, நல்ல விஷயம் என்று
நாம் அங்கு போனாலும்
நாவு பழுதடையா
நாம் பார்க்க வேண்டாமா

வருத்த விசாரணையின்
வரைவிலக் கணத்தில் நாம்
திருத்தம் கொண்டு வர
தீர்மானம் எடுக்க வேண்டும்
ஆம்! நோய் விசாணையை
நூதனமாய் மாற்றி சுக விசாரணையாய்
சொல்லப் பழகிடுவோம்
சுகத்துக்கு விதை நடுவோம்

பஸ்மினா அன்ஸார்

# கவிஞர் சித்தி மசூறாவின் "சிறுகதை உலகம்"

**"விளிம்புநிலை வாழ்வின் வலிகளும் வலிகரமான விடுதலையும்"**






கலாபூஷணம் கவிஞர் சித்தி மசூறா சுஹ"ர்தீன் அவர்களின் "மனசுக்குள் ஒரு தாஜ்மஹால்" சிறுகதைத் தொகுப்பில் இருந்து மற்றுமொரு சிறுகதையான ..
"மனசுக்குள் ஒரு தாஜ்மஹால்" தொடர்பான எனது பார்வை:

**கதைச் சுருக்கம்:**

இந்தக் கதை பல்கீஸ் என்ற பெண்ணின் வாழ்க்கையையும், அவளது நிறைவேறாத காதலையும் விவரிக்கிறது.

இரண்டு சகோதரர்களுக்குப் பின் பிறந்த பல்கீஸ், தனது குடும்பத்தில் மிகவும் செல்லமாக வளர்க்கப் படுகிறாள்.

அவளது மாமியார், பல்கீஸைத் தனது வீட்டிற்கு மருமகளாக ஆக்கிக் கொள்ள ஆசைப்படுகிறார்.

பல்கீஸ"ம் அவளது மாமன் மகனான புஹாரித்தீனும் ஒருவரையொருவர் காதலிக்கின் றனர். அவர்கள் கிணற்றடியில் சந்தித்துக் கொள்வதும், புஹாரித்தீன் அவளுக்காகப் பாடல் பாடுவதும் என அவர்களது காதல் வளர்கிறது.

1963-ஆம் ஆண்டு புஹாரித்தீன் பல்கீஸிற்கு எழுதிய கடிதத்தில், "தான் அவளை மட்டுமே திருமணம் செய்துகொள்வேன்" என்றும், அவளது நினைவுகள் எப்போதும் தன்னுடன் இருப்பதாகவும் உறுதியளிக்கிறார்.

இறுதியில் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது, ஆனால் அந்த வாழ்க்கை பல்கீஸிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை.

பல்கீஸின் மாமியாருக்கு அவளைப் பிடிக்காமல் போனதால், பல்கீஸை புஹாரித்தீனிடமிருந்து பிரிக்கப் பல முயற்சிகளைச் செய்தார்.

அவளது மாமியார் பில்லி சூனியம் போன்ற வற்றில் ஈடுபட்டு, பல்கீஸைத் துன்புறுத்தியதாகக் கதை குறிப்பிடுகிறது. மாமியாரின் கொடுமை களாலும், குடும்பப் பிரச்சினைகளாலும் புஹாரித்தீனுக்கும் பல்கீஸ"க்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது.

இது நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு வரை சென்றது. புஹாரித்தீன் அவளைக் கைவிட்டதால், பல்கீஸ் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானாள்.

தன்னைக் கைவிட்ட கணவன் மீதான கோபமும், ஏமாற்றமும் அவளை ஒரு மனநோயாளியைப் போல மாற்றியது.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, 67 வயதான பின்னரும் பல்கீஸ் தனது பழைய நினைவுகளுடனேவாழ்ந்து வருகிறாள்.

தனது பழைய பெட்டியில் சேமித்து வைத்திருக்கும் புஹாரித்தீனின் கடிதங்களை வாசிப்பதும்,
உடைந்துபோன கடந்த காலக் காதலை எண்ணி வருந்துவதுமே அவளது வாழ்க்கையாக இருக்கிறது.

தனது வாழ்நாள் முழுவதையும் ஒரு தோல்வி யுற்ற காதலின் நினைவுகளுடனேயே பல்கீஸ் கழிப்பதை இந்தக் கதை மிகவும் உருக்கமாகச் சித்தரிக்கிறது.

பல்கீஸின் வாழ்க்கை உண்மையில் ஒரு தீராத சோகம்தான். ஒரு அழகான காதல், குடும்பச் சூழலால் எப்படிச் சிதைந்து போகிறது என்பதை இந்தக் கதை மிக உருக்கமாகச் சொல்கிறது

1963-இல் எழுதப்பட்ட கடிதங்களை அப்படியே கதையில் பயன்படுத்தியது கதையின் மிகப் பெரிய பலம். இது ஏதோ கற்பனைக் கதை என்பதைத் தாண்டி, நிஜமாகவே ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பார்ப்பது போன்ற உணர்வைத் தருகிறது.

மேலும்,"ம்மா, மச்சி" போன்ற எமது கிழக்கு மாகாணத்திற்கே உரிய உறவுமுறைப் பெயர்கள், திருமணச் சடங்குகள் மற்றும் கிணற்றடிப் பாடல்கள் என்பன கதையை மிகுந்த உயிர்ப்புடன் காட்டுகின்றன. அப்பாடல்களில் உள்ள ஏக்கம் வாசகர்களை எளிதில் தொற்றிவிடுகிறது.

அத்துடன்,ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்த காதல், கடிதப்போக்குவரத்து, குடும்ப அதிகாரக் கட்டமைப்பு ஆகியவற்றையும் ஆசிரியர் மிகத் துல்லியமாகப் பதிவு செய்துள்ளார்.

கதையானது கடைசியில் ஒரு முதிய பெண்ணின் தனிமையில் வந்து முடிவது, வாசிப்பவர்களுக்கு ஒரு கனத்த உணர்வைத் தந்து விடுவதோடு, கதையைப் பற்றி யோசிக்கவும் வைக்கிறது.

" பல்கீஸ் "கதாபாத்திரம் இறுதிவரை ஒரு 'பாதிக்கப்பட்ட' பெண்ணாகவே இருக்கிறது. அவர் அந்தத் துயரத்திலிருந்து மீள முயற்சிப்பதோ அல்லது தனக்கான ஒரு புது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதோ கதையில் காட்டப்படவில்லை. இது ஒரு சோகமான உண்மை என்றாலும், ஒரு கதையாகப் பார்க்கும்போது நாயகியின் செயலின்மை சற்று தொய்வைத் தருகிறது.

"போராட்ட குணம் நிரம்பப் பெற்றவர்" என நான் நம்பும் மசூரா ரீச்சரின் இந்தக் கதை முடிவைப் பார்த்தபோது சிலவேளை இது அன்றைய நாளில் நிகழ்ந்த உண்மைச் சம்பவமாக இருக்கக் கூடுமோ என்று எண்ணிக் கொள்கிறேன்.

அத்துடன்,அவ்வளவு தீவிரமாகக் காதலித்த புஹாரித்தீன், ஏன் அவ்வளவு எளிதாகத் தன் மனைவியைக் கைவிட்டார்? அவரது தரப்பு நியாயங்கள் அல்லது அவரது மனப்போராட்டம் கதையில் போதுமான அளவு விவரிக்கப்பட வில்லையோ ,அவர் வெறும் ஒரு 'நிழல்' கதா பாத்திரமாகவே வந்து போகிறாரோ என்றெல்லாம் எண்ணவும் தோன்றியது.

இச்சிறுகதை ஆரம்பம் முதல் இறுதி வரை ஒருவிதமான அழுத்தமான சோகத்திலேயே பயணிக்கிறது. இடையில் சிறிய அளவிலான மகிழ்ச்சியான தருணங்கள் இன்னும் கொஞ்சம் விரிவாக இருந்திருந்தால், அந்த இழப்பின் வலி இன்னும் அதிகமாகத் தெரிந்திருக்குமோ என்னவோ.

ஆனாலும்,
இந்தக் கதையில் வரும் கடிதங்கள் மனிதர்களை விட நேர்மையானவை என்றுதான் சொல்ல வேண்டும். மனிதர்கள் மாறிவிட்டார்கள், ஆனால் அந்தக் கடிதங்களில் உள்ள வார்த்தைகள் இன்னும் பல்கீஸை காதலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

பல்கீஸ் போன்ற பெண்கள் இன்னும் நம் சமூகத்தில் "வாழும் நினைவிடங்களாக" இருக்கிறார்கள் என்பதை இந்தப் படைப்பு நம் முகத்தில் அறைந்து சொல்கிறது.

மனசுக்குள் ஒரு தாஜ்மகால் கதையை வாசித்து முடித்த பிறகு, "காதல் திருமணத்தை விட, காதலித்த பின் நடக்கும் திருமண வாழ்க்கைதான் அதிக சவாலானது" என எண்ணிக் கொள்கிறேன்.

நாயகியின் கதாபாத்திரம் எவ்விதப் போராட்டமும் இன்றி எப்போதும் ஒரு பலியானவராகவே இருப்பதுடன், மாமியார் மற்றும் பில்லி சூனியம் தொடர்பான சித்தரிப்புகள் சற்று தேய்வழக்கான பழைய பாணியில் அமைந்திருப்பது போலவும் இருக்கிறது.எனினும் இது அவரின் எண்பதுகளில் எழுதப்பட்ட கதைகளில் ஒன்றாக இருக்கலாம்.

இக்கதையை வாசித்து மிகநீண்ட நேரம் கடந்தும் அது தந்த உணர்வுச் சிக்கல்களுக்குள் இருந்தும் என்னால் வெளிவர முடியாமல் போனதே இந்தக் கதையின் வெற்றி என்பேன்.

தொகுப்பின் மற்றுமொரு சிறுகதை தொடர்பிலான என் பார்வையில் மறுபடியும் சந்திக்கும்வரை...
மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

எஸ். பாயிஸா அலி


# அகமட் இம்தியாஸ் எழுதிய "உலகை ஜெயித்தவர்கள்" நூல்வெளியீடு












ஹொரொவ்பொத்தான அகமட் இம்தியாஸ் எழுதிய "உலகை ஜெயித்தவர்கள்" நூல்வெளியீடு கடந்த 13ஆம் திகதி ஹொரொவ்பொத்தான பிரதேச சபை விழா மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.
சவால்களை சளைக்கச்செய்து
சாதித்தவர்கள் பற்றிய உண்மைக்கதைகள் பல அடங்கிய இந்நூல் வெளியீட்டு விழா
ஹொரொவ்பொத்தான அஃ பதியுத்தீன் மஹ்மூத் மகா வித்தியாலய(தேசிய பாடசாலை)யின் அதிபர் அல்ஹாஜ் ஆர். இஸ்ஹாக் அவர்களது தலைமையில் நடைபெற்றது.
கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் திரு.ஆர். செந்தில் அவர்கள் பிரதம அதிதியாக நிகழ்வில் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக புத்தளம் மாநகர ஆணையாளர் திரு.ஜே.ரழியுத்தீன் அவர்களும் கலந்து கொண்டார்.சிறப்பு அதிதிகளாக நீதிமன்ற பதிவாளர் திரு.எம்.ரினோஸ் ஹொரொவ்பொத்தான பிரதேச செயலகத்தின் நிருவாக கிராம உத்தியோகத்தர் மற்றும் முன்னாள் நீதிமன்ற பதிவாளரும் திருகொணமலை தமிழ்ச்சங்க ஆலோசகருமான திரு. எஸ். எம் . நஸீர்,கவிஞர் நாச்சியாதீவு பர்வீன், ஹனா அன்வர் சதாத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.பிரதேச பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து சிறப்பித்த இவ்விழாவில் நயவுரை கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் நிகழ்த்தினார்.
நூலின் முதற்பிரதியை ஹொரொவ்பொத்தான பீ.எஸ்.பாமசி உரிமையாளர் திரு சதாத் சலீம் பெற்றுக் கொண்டார்.
இது நூலாசிரியரின் நான்காவது நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது.நிகழ்ச்சிகளை பிரபல ஒலி ஒளிபரப்பாளர் அஹமட் எம் நஸீர் அவர்கள் செவ்வனே தொகுத்து வழங்கினார்.


# ஜெஸ்மி எம்.மூஸா எழுதிய "அஷ்ர:ப் எனும் இலக்கியம்" ஆய்வு நூல் வெளியீட்டு விழா











இலக்கிய விமர்சகரும், சிரேஷ்ட ஊடகவியலாளரும், வருகைதரு விரிவுரையாளருமான ஜெஸ்மி எம்.மூஸா எழுதிய "அஷ்ரஃப் எனும் இலக்கியம்" ஆய்வு நூல் வெளியீட்டு விழா நேற்று மருதமுனை கலாசார மண்டபத்தில், வாழ்நாள் ஊடக சாதனையாளர் கலாபூஷணம் மர்/ஹும் ஏ.எல். எம்.சலீம் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.
தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறையின் தவிசு பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லா தலைமையில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ச/ஹதுல் நஜீம் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழா வில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசாரப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாஸில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# அன்பான வாசகர்களே!

**அறிவுக்கரை பகுதிக்கு உங்களது இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என உங்களது ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க கீழே உள்ள whatsapp இலக்கத்தை பயன்படுத்தவும்.**

0767877876

# கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இளம் தொழில் முயற்சியாளர்களைக் கௌரவித்த ஆர் ஜே மீடியா

( ஐ. ஏ. காதிர் கான் )

"முயற்சிக்கு என்றும் முதலிடம்" எனும் மகுட வாசகத்துடன் ஊடகத் துறையில் தடம் பதித்து வரும் ஆர் ஜே மீடியா ஊடக வலையமைப்பின் மற்றுமொரு மைல்கல்லாக, இளம் தொழில் முயற்சியாளர்களைக் கௌரவிக்கும் விருது வழங்கல் விழா, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், அண்மையில் மிக விமர்சையாக இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் சிறந்த முறையில் தொழில் நிறுவனங்களை நடத்தி வரும் இளம் திறமையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.







ஆர் ஜே மீடியா ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் ஏ.எம். இன்ஷாப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறந்த சுயதொழில் முயற்சியாளர்கள் மற்றும் சாதனையாளர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக, சம்மாந்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரும் விரிவுரையாளருமான ரஸ்மி மூஸா கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக கொழும்பு மாநகரசபை உறுப்பினர் மொஹமட் நௌபர், வெடிங் ட்ரீம் அகாடமி பணிப்பாளர் எப். தஷரூபா உள்ளிட்ட நிர்வாக மற்றும் பல சமூகச் செயற்பாட்டா ளர்களும் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினர்.

தமது கடின உழைப்பால் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி வரும் தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு கௌரவித்த இந்த நிகழ்வானது, எதிர்கால இளம் தலைமுறையினருக்கு பெரும் உந்துதலாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தெகிவளை பாபக்கர் குர்ஆன் மத்றஸாவில் ஹிப்ழ் மாணவிகள் கௌரவிப்பு







தெஹிவல பாபக்கர் மஸ்ஜிதில் இயங்கி வரும் "தாருல் குர்ஆன் லிபரா இமில் ஈமான் " அல் குர்ஆன் மத்ரஸாவில் அல் குர்ஆனை (ஹிப்ழ்) முழுமையாக மனன மிட்ட மாணவிகளை கௌரவிப்பு நிகழ்வு கடந்த வாரம் இடம் பெற்றது. 9 வயது நிரம்பிய சைமா பஸீல் மற்றும் ஸனா அப்துல் அஸீஸ், அனீகா அம்ஜத் ஆகியோருடன் பாபக்ர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் மௌலவி எம்.எஸ்.எம்.தாஸீம் மத்ரஸாவின் பணிப்பாளர் மௌலவி நாழிம் ஆகியோரைக் காணலாம்.

## கொண்டச்சி மாணவி சஸ்னாவுக்கு மாவட்டத்தில் ஒன்பதாம் இடம்

( ஐ. ஏ. காதிர் கான் )

இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தினால் 2026.04.01 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி, மன்னார் கொண்டச்சி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி இமாமுதீன் சஸ்னா 3ஏ திறமைச் சித்திகளுடன், மாவட்டத்தில் 9 ஆவது இடத்தையும், தேசிய மட்டத்தில் 905 ஆம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இம்மாணவி, கலைப்பிரிவில் புவியியல், அரசியல், தமிழ் ஆகிய பாடங்களில் 3 ஏ திறமைச் சித்திகளைப் பெற்று பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பையும் பெற்று, மண்ணுக்கும் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளதாக, வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சாதனையை நிகழ்த்திய இம்மாணவியை ஊக்கப்படுத்தி, பாடங்களைக் கற்பித்த ஆசிரியர்களுக்கு வித்தியாலய அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர் மற்றும் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் என அனைவரும் கல்லூரி சமூகம்



சார்பாகப் பாராட்டி, தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

இம்மாணவி, மன்னார் சிலாவத்துறை கொண்டச்சி யைச் சேர்ந்த ஏ.ஏ.ஆர். இமாமுதீன் - கே.எஸ். சபீனா தம்பதியினரின் புதல்வியுமாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


## உதவி கோரல் !

அஸ்ஸலாமு அலைக்கும்!
தலசீமியா (Thalassemia) நோயால் பாதிக்கப்பட்ட 11 வயது சிறுமிக்கான அவசர உதவி கோரல்.
ரூ. 2 கோடி நோக்கி எங்கள் பயணம் தொடர்கிறது.
இதுவரை சேகரிக்கப்பட்ட மொத்த தொகை:
Rs 7,478,956.97
அன்பு உள்ளங்களின் ஒற்றுமையும் கருணையும் இந்த அளவுக்கு எங்களை முன்னேற்றியுள்ளது.
ஆனால் இன்னும் பயணம் நிறைவடையவில்லை. இந்த 11 வயது சிறுமியின் உயிரைக் காப்பாற்ற உங்கள் தொடர்ந்த ஆதரவு மிகவும் அவசியம்.
ஒவ்வொரு பங்களிப்பும் ஒரு உயிரின் நம்பிக்கையாக மாறுகிறது.

ஒரு பங்கின் மதிப்பு:
Rs. 6,000/=
(சிகிச்சை, மருந்து, இரத்தமாற்றம் மற்றும் மருத்துவச் செலவுகளுக்காக)

உங்கள் பங்களிப்பை வழங்கும் வழிகள்:
Bank மூலம்:
A.W.M. Rimsan
A/C No: 179200155496413
Bank: People's Bank
Branch: Galnewa

நேரடியாக வழங்க:
AT Stores – Kappalagama
071 890 7889

Sky Graphics – Kalawewa
071 173 8282

Pet Zone- Kalawewa
077 26 32 963

Grill Court- Kusalangama
076 090 5151

உங்கள் இடத்திற்கே வந்து பெற:
Nishath - 074 182 6382
Shifan - 071 819 6118
Irshad - 071 173 8282

உங்கள் ஒவ்வொரு உதவியும் தலசீமியாவுடன் போராடும் அந்தச் சிறுமியின் வாழ்க்கையில் ஒரு புதிய கதிரொளியாக மாறுகிறது.


## உக்குவளை வாசிப்போர் ஒன்றியத்தின் "எமது முத்துக்கள் நூல்"

(உக்குவளை ஜெலீல்)

உக்குவளை வாசிப்போர் ஒன்றியம் உக்குவளை பிரதேசத்திலுள்ள மூத்த மற்றும் வளரும் இளம் கலைஞர்கள் எழுத்தாளர்கள் கவிஞர்கள் படைப்பாளிகள் ஆகியோர் பற்றிய விபரங்களடங்கிய "எமது முத்துகள்" எனும் பெயரில் நூல் ஒன்றை வெளியிடவுள்ளது.

இதில் தங்கள் பெயரும் இடம்பெற விரும்புவோர் தமது கலை எழுத்து கவிதை படைப்பு ஆகிய துறைகள் பற்றிய விபரங்களை தமது புகைப்படத்துடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் இவர்களுடனான கலந்துரையாடலொன்றை நடாத்துவதற்கும் இவ்வொன்றியம் தீர்மானித்துள்ளது.

**முகவரி**

EMADHU MUTHTHUKKAL
READERS FORUM
26/C, MARUKONA
UKUWELA - 21300

## சிறப்பாக நடைபெற்று முடிந்த 159 ஆவது வருட சாதுலியா மனாகிப் மஜ்லிஸ்

(பேருவளை பீ.எம் முக்தார்)

ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் குத்புல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (றழி) அவர்களின் 860ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு (1100 ஆண்டுகள் பழமைமிகு) இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலுடன் இணைந்த சாதுலியா ஸாவியாவில் 159ஆவது வருட சாதுலியா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபவம் 18.04.2026 சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றுது.

ஷாதுலிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய சேஹ/ஸ் ஸஜ்ஜாதா அஷ்ஷெய்ஹ் மஹ்தி அப்துல்லாஹ் அல்பாஸி அல் மக்கீ அஷ்ஷாதுலி நாயகம் அவர்களின் அனுமதியின் கீழ் ஜமாஅத் சபைத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி





அல் ஹாஜ் எம்.ஏ.எம் ஹனபியின் வழி காட்டலின் கீழ் கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவி அல் ஹாஜ் எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி), மௌலவி எம்.ஜே.எம் பஸ்லான் (அஷ்ரபி - யமனி, பீ.ஏ) ஆகியோரின் இணைத் தலைமையின் கீழ் நடைபெற்ற இம்மஜ்லிஸில் காலி அலிய்யா அரபுக் கல்லூரி பணிப்பாளர் கலீபத்துல் குலபா மௌலவி அல் ஹாஜ் எம்.இஸட்.எம் முஹம்மத் ஸூஹூர் ஆலிம் (பாரி) விஷேட சொற்பொழிவாற்றினார்.

ஜமாஅத் சபைத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அல் ஹாஜ் எம்.ஏ.எம் ஹனபி, தர்ம கர்த்தாக்களான அல் ஹாஜ் அதாஉல்லாஹ் அபூபக்கர், தேசகீர்த்தி அல் ஹாஜ் ஜாபிர் முஹம்மத் ஜே.பி, அல் ஹாஜ் பயாஸ் ஜெஸூல் ஜே.பி, டாக்கடர் அல் ஹாஜ் ஏ.எச்.எம் முஹம்மட் மர்ஜான், அல் ஹாஜ் முஹம்மத் ரிஸா ஜெஸூல், அல் ஹாஜ் எம்.எச்.எம் முஹம்மட் ஹூஸைப், அல் ஹாஜ் இஷாக் ராபி, அல் ஹாஜ் இர்பான் ஸூல்தான், ஆகியோரின் வழிகாட்டலுடன் மேற்படி 159 வது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸ் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மஜ்லிஸில் கலீபதுஷ்ஷாதுலிகளான மௌலவி எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி), மௌலவி அஹ்மத் ஸூபி (மஹ்ழரி), மௌலவி அல்ஹாஜ் எம். ஜே. எம். பஸ்லான் ஜெஸூல் (அஷ்ரபி - பீ.ஏ.), அல்ஹாஜ் அஷ்சேக் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி), மௌலவி எம்.ஐ.எம் பாறூக் (மக்கி), மௌலவி முஹம்மத் மபாஸ் (பஹ்ஜி), மஸ்ஜிதுல் அப்ரார் இமாம்களான மௌலவி முஹம்மத் முகர்ரம் (அஸ்ஹரி) மௌலவி முஹம்மத் நிசாத் (அலவி) முஹம்மத் அல்பாஸி கல்லூரி அதிபர் மௌலவி பைஸல் காமில் (ஸக்காபி), முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அல் ஹாஜ் எம்.எஸ்.எம் அஸ்லம், பலஸ்தீன நாட்டின் முன்னாள் தூதுவர் அல் ஹாஜ் பௌஸான் அன்வர், பேருவளை நகர சபை முன்னாள் தலைவர் அல் ஹாஜ் மஸாஹிம் முஹம்மத் உட்பட உலமாக்கள் கலீபாக்கள் ஷாதுலிய்யா தரீக்கா மூத்த பிரமுகர்கள், இஹ்வான்கள் என பலரும் தமாம் மஜ்லிஸில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மீண்டும் போர் மூளும் அபாயம்?

## யுத்த நிறுத்தம் புதன் நிறைவு!

## போருக்கு ரெடி!!

## இரு தரப்பும் கங்கணம்!!!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)



லெபனானில் ஏற்பட்டுள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஒட்டி, சர்வதேச வர்த்தக நலன் கருதி இந்த முக்கிய கடல் வழிப்பாதை திறக்கப்படுவதாக ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராகாசி தெரிவித்துள்ளார்.இதன் மூலம் உலகளாவிய எரிசக்தி விநியோகம் மற்றும் சரக்கு போக்குவரத்து சீராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், ஈரான் புரட்சிகர பாதுகாப்புப் படை இந்த அறிவிப்புடன் சில கடுமையான புதிய நிபந்தனைகளை விதித்துள்ளது.ஹோர்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்லும் அனைத்து சிவிலியன் மற்றும் வணிகக் கப்பல்களும் ஈரானிய துறைமுகங்கள் மற்றும் கடல்சார் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட பாதைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

ஈரானிய கடற்படையின் முறையான அனுமதி இன்றி எந்தவொரு கப்பலும் நுழையக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ராணுவக் கப்பல்கள் இந்தப் பாதையைப் பயன்படுத்த முற்றிலுமாக தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஈரானின் அரசு ஒளிபரப்பு நிறுவனமான ஐஆர்ஐபி-இல் வெளியான அறிக்கையில், அமெரிக்கா "முற்றுகை என்ற போர்வையில் தொடர்ந்து கடல் கொள்ளை மற்றும் கடல்சார் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக" இஸ்லாமிய புரட்சிகர காவல்படை குற்றம் சாட்டியுள்ளது.

ஹார்மூஸை ஜலசந்தியை மீண்டும் திறக்கும் முந்தைய முடிவு நிபந்தனைக்கு உட்பட்டது என்றும், அது அமெரிக்காவின் இணக்கத்தைப் பொறுத்தது என்றும் அந்தப் படை தெரிவித்தது. அந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாததால் மீண்டும் மூடும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

ஈரானின் மத்திய ராணுவத் தலைமையகம் இந்த அறிவிப்பை உறுதிப்படுத்தியுள்ளதுடன், நீர்வழியின் மீது மீண்டும் "கடுமையான மேலாண்மை" நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளது. தற்போதைய ராஜதந்திர முயற்சிகளின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டிருந்த தளர்வுகளை இந்த உத்தரவு ரத்து செய்கிறது.

ஈரானிய துறைமுகங்களுடன் தொடர்புடைய கப்பல்கள் மீதான கட்டுப்பாடுகளை அமெரிக்கா நீக்காததன் மூலம் தனது உறுதிமொழிகளை மீறிவிட்டதாகவும், இது பேச்சுவார்த்தை செயல்முறையில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். உலகின் மிக முக்கியமான கடல்வழிப் பாதைகளில் ஒன்றில் இடையூறு ஏற்படும் என்ற அச்சத்தை அதிகரித்துள்ளது. உலகளாவிய எண்ணெய் ஏற்றுமதியில் பெரும் பங்கு ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே நடைபெறுவதால், இங்கு விதிக்கப்படும் எந்தவொரு கட்டுப்பாடும் சர்வதேச அளவில் கவலைக்குரிய விஷயமாகப் பார்க்கப்படுகிறது.

ஈரானுடன் வணிகம் செய்யும் கப்பல்களுக்கு முழுமையான வழிசெலுத்தல் சுதந்திரம் கிடைக்கும் வரை இந்தக் கட்டுப்பாடுகள் தொடரும் என்று ஈரானிய அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதன் மூலம் இந்த பிரச்சினை மேலும் சிக்கலான ஒரு பரிணாமத்தை அடைந்துள்ளது என்பதே உண்மையாகும்.

அமெரிக்கா ஈரான் துறைமுகங்களை தொடர்ந்து தனது கட்டுப்பாட்டில் கொண்டு முடக்கி வந்தால், ஹார்முஸ் நீரிணை மீண்டும் மூடப்படும் என்று ஈரான் நாடாளுமன்ற சபாநாயகரும், அமெரிக்கா உடனான பேச்சுவார்த்தை குழுவில் முக்கிய நபராக இருக்கும் முகமது பாகர் காலிபாப் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு உலக வர்த்தகம் மற்றும் எரிசக்தி சந்தையில் மீண்டும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈரான் தரப்பின் இந்த நிலைப்பாடு, அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளில் புதிய சவாலை உருவாக்கியுள்ளது.

முகமது பாகர் காலிபாப் தனது எக்ஸ் பதிவில் "அமெரிக்க கடற்படையின் டீடூமயனந தொடர்ந்தால் ஹார்முஸ் நீரிணை திறந்திருக்காது" என்று அவர் தெளிவுபடுத்தினார். இந்த நீரிணை வழியாக செல்லும் போக்குவரத்து ஈரான் அரசின் அனுமதியைப் பொறுத்தே இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். நேற்று இரவு 10க்கும் மேற்பட்ட கப்பல் ஹார்முஸ்-ஐ கடக்க முயன்று மீண்டும் திரும்பியது.

ஹார்முஸ் நீரிணை உலகின் பல நாடுகளின் எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதிக்கு மிக முக்கியமான பாதையாகும். இதை மூடுவது மூலம் உலக அளவில் எரிபொருள் விலையை பாதிக்கும் என்பதால் உலகின் அனைத்து நாடுகளும் இப்பாதையை விரைவாக திறக்க கோரிக்கை வைத்து வருகிறது. ஈரான் தரப்பின் இந்த எச்சரிக்கை, அமெரிக்காவின் முடக்கத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்ற கோரிக்கையாகவும் பார்க்கப்படுகிறது.

இதேவேளையில் ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் டிரம்ப் நேற்று இரவு ஒரு மணி நேரத்தில் போர் தொடர்பாக ஏழு முக்கிய விஷயங்களை ஈரான் வாக்குறுதி அளித்ததாக ட்ரூத் சோஷியல் தளத்தில் குறிப்பிட்டார். இந்த வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும் முகமது பாகர் காலிபாப் பொட்டில் அடித்து போல் தெரிவித்தார்.இந்த பொய்களால் அமெரிக்கா இந்த போரில் வெற்றி பெறவில்லை. சொல்லப்போனால் இந்த பொய்களால் இரு நாடுகள் மத்தியிலான பேச்சுவார்த்தைகளிலும் கூட எவ்விதமான முன்னேற்றமும் அமெரிக்கா காணவில்லை" என்று காலிபாப் தெரிவித்தார். ஈரான் அரசின் இந்த கடுமையான விமர்சனம், இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றத்தை மீண்டும் அதிகரித்துள்ளது.ஈரான் ஹார்முஸ்-ஐ முடிவதாக எச்சரித்துள்ளது,

தற்போதைய நிலையில் வரும் 22-ம் தேதியுடன் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் முடிவுக்கு வருகிறது. இந்நிலையில், "போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுமா?" என செய்தியாளர் சந்திப்பில் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு ட்ரம்ப் பதில் அளித்துள்ளார்.

வரும் புதன்கிழமைக்குள் (ஏப்.22) ஈரான் உடனான பேச்சுவார்த்தையில் சுமுக உடன்பாடு எட்டப்பட்டு, ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும். அப்படி நடக்காத பட்சத்தில் இந்த இடைக்கால போர் நிறுத்தம் முடிவுக்கு வரும். மீண்டும் குண்டுகளை வீச வேண்டி இருக்கும். போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட வாய்ப்பில்லை என ட்ரம்ப் தெரிவித்தார்.அதே நேரத்தில் ஈரான் உடனான திரை மறைவு பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் இருப்பதாகவும், விரைவில் நல்ல செய்தி வரும் என்றும் அமெரிக்க அரசு தரப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் ஈரானிய துப்பாக்கிப் படகுகளால் (புரடெிழயவள) எண்ணெய் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என ஐக்கிய ராஜ்ஜியத்தின் கடல்சார் வர்த்தக நடவடிக்கைகள் அமைப்பு (UKMTO) தெரிவிக்கிறதுஹோர்மூஸ் நீரிணையில் இருந்த ஒரு எண்ணெய் கப்பல் மீது, இரானின் இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த இரண்டு துப்பாக்கிப் படகுகளால் தாக்குதல் நடத்தப்பட்டதாக யுகேஎம்டிஓ தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் ஓமனுக்கு வடகிழக்கே 20 கடல் மைல் தொலைவில் நிகழ்ந்ததாக கூறப்படுகிறது. எண்ணெய் கப்பலும் அதன் பணியாளர்களும் பாதுகாப்பாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என யுகேஎம்டிஓ மேலும் கூறுகிறது.இதேபோல், நீரிணையை கடக்க முயன்றபோது குறைந்தது இரண்டு வர்த்தகக் கப்பல்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக மூன்று வட்டாரங்கள் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே, இரான் அதி உயர் தலைவர் மொஜ்தபா காமனெயி பெயரில் எழுத்துப்பூர்வ அறிக்கை வெளியாகி உள்ளது. இரான் ஊடகங்கள் அதை செய்தியாக வெளியிட்டுள்ளன. அதில், எதிரிகளை புதிய தோல்வியின் கசப்பை சுவைக்க வைக்க இரானிய கடற்படை தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பாக எந்த தெளிவுபடுத்தலும் அந்த அறிக்கையில் இல்லை.மார்ச் தொடக்கத்தில் அதி உயர் தலைவராக பதவியேற்றதிலிருந்து இதுவரை மொஜ்தபா காமனெயி பொதுவெளிக்கு வரவில்லை. அவர் பெயரில் தொடர்ந்து எழுத்துப்பூர்வ அறிக்கைகள் மட்டுமே வருகின்றன.

இது போன்ற கடுமையான சூழலில் சமாதானம் என்பது கானல் நீர் போன்றதாகவே நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. ஈரான் வலிமையான ஏவுகணை தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் அமெரிக்கா கடற்படை கப்பல்களை முற்றிலுமாக பின்வாங்கிட செய்யும் நிலையில், சீனா ஈரான் ஐ ஆர் ஜி சி அமைப்பிற்கு ஏராளமான ஆயுதங்களை மறைமுகமாக சப்ளை செய்து வருவதாக அமெரிக்க உளவு அமைப்பு சி ஐ ஏ எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா அண்டை நாடுகளான இறையாண்மையை முதலில் மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும் என்று சீனா ஈரானுக்கு ஆதரவாக களத்தில் நின்று கொண்டு இருக்கிறது. சீனா தனது நிலையில் ஹெர்மூஸ் ஜலசந்தியை ஈரானின் அதிகார கடலாதிக்க பகுதி என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்று தெரிவித்துள்ளது. அதே சமயம் பல்வேறு நாடுகளினூடாக ஈரானுக்கு சீனா ஆயுதங்களை சப்ளை செய்து வருவதாக தொடர்ந்து செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய நிலையில் எந்த நேரத்தில் என்ன பேசுவார் என்பதை யாரும் அறிந்து கொள்ள இயலாத நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் நாட்டின் ராணுவ தலைமை தளபதி அசீம் முனீர் இந்த சமாதானத்தை ஏற்படுத்த பல்வேறு வகையான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.இந்த நிலையில் அமெரிக்கா - ஈரான் மத்தியிலான பேச்சுவார்த்தைகளுக்கு புதிய தடையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல் பாகிஸ்தான் தலைமையில் நடத்த திட்டமிட்டுள்ள 2ஆம் கட்ட பேச்சுவார்த்தையின் நிலையும் கேள்விக்குறியாகியுள்ளது. அப்படி ஒரு சம்பவம் மீண்டும் மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் ஏற்பட்டால் அது பிராந்திய பதட்டத்தை தவிர்த்து ஒட்டு மொத்த சர்வதேச சமூகமும் மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை சந்திக்கும் என்பதை நிதர்சனமான நிலையாகும்.

## மனநலமும் ஆலோசனையும் 97

# பொறுப்பில்லா வேகம் "நிரந்தர இழப்பு"



மரணம் எங்கேயும் வரலாம்...
எப்படியும் வரலாம்...
ஆனால், அதை காரணம் காட்டி
பொறுப்பின்றி வாழ்வது..
துணிவு அல்ல... அது முட்டாள்தனம்.

மரணம் ஒரு முடிவு மட்டும் அல்ல,
அது ஒரு செய்தி...
ஒரு மனிதன் எப்படி வாழ்ந்தான்
என்பதைச் சொல்லும்
கடைசி வரி – மரணம்.

அந்த வரி
மரியாதையோடு எழுதப்பட
வேண்டியது...
பயத்திலும் பாவத்திலும் அல்ல.
தன்னையே அழித்துக் கொள்வதிலும்,
மற்றவரை அழித்துவிடுவதிலும்
அல்ல.

சட்டத்தை மீறி,
வேகத்தில் மயங்கி,
தன்னையும் மற்றவர்களையும்
சாலையில் சிதைக்கும் மரணம்...
அது விபத்து அல்ல.
அது ஒரு தேர்வு.
தவறான தேர்வு.
பிழையான தேர்வு.

இது...
உயிரை இழப்பது மட்டும் அல்ல,
பல குடும்பங்களை உடைக்கும்
கொடூரம்.
வாழ்நாளெல்லாம் நினைவில் நிற்கும்
வேதனை.

அறிவில்லாத வேகம்,
அதிகாரம் இல்லாத சுதந்திரம் –
அதுவே கொலைவழி.

வாகனம் ஓட்டுவது திறமை அல்ல,
அது பொறுப்பு.
அது சட்டத்தின் கட்டுப்பாடு.

தன் மார்க்கத்துக்குச் செய்யும்
கேவலம்...
நாட்டுக்கும், சமூகத்திற்கும்
வெறுப்பையும் கோபத்தையும்
விதைக்கும் செயல்.

இந்த உண்மையை உணராத
இளைஞன் –
தன் உயிரை மட்டுமல்ல,
மற்றவர்களின் உயிரையும்
மதிக்காதவன்.

அவர்களை தடுக்காத பெற்றோர் –
மௌனமாக ஒப்புதல் தருபவர்கள்.
உங்கள் மௌன ஒப்புதல்,
ஒருநாள் உங்களை நிரந்தர
மௌனமாக்கி விடும்.

மூஇதில் பொறுப்பு இளைஞர்களுக்கு
மட்டும் அல்ல...

பெற்றோர் –
பிள்ளைகளுக்கு வாகனம்
கொடுப்பதற்கு முன்
பொறுப்புணர்வை கற்றுக் கொடுக்க
வேண்டியது கடமை.
அனுமதியில்லா சுதந்திரம்
அழிவின் விதை என்பதை உணர்த்த
வேண்டும். சட்டத்தின் அழகை கற்றுக்
கொடுக்க வேண்டும்.

பாடசாலை –
பாடப்புத்தக அறிவை மட்டுமல்ல,
வாழ்க்கை பாதுகாப்பு அறிவையும்
நெறிமுறை மதிப்புகளையும்
விதைக்க வேண்டும்.

சமூகம் –
தவறை பார்த்தும் மௌனமாக
இருக்காமல்,
சரியானதை ஆதரித்து,
பொறுப்புணர்வை வளர்க்கும் சூழலை
உருவாக்க வேண்டும்.

உயிர் ஒரு விளையாட்டு அல்ல.
சாலை ஒரு மேடையும் அல்ல.

ஒவ்வொரு தவறான ஓட்டமும்...
ஒரு மரண அழைப்பிதழ்.

நினைத்துப் பாருங்கள்...
உங்கள் வேகத்திற்கு
உங்கள் வாழ்க்கையே இரையாக
வேண்டுமா?

அல்லது..
உங்கள் வேகத்திற்கு
யாரோ ஒருவரின் வாழ்க்கையை
விலை கொடுக்க வேண்டுமா?

"இன்று நீங்கள் கட்டுப்படுத்தும்
வேகம்....
நாளை யாரோ ஒருவரின் உயிரைக்
காப்பாற்றும்.

ஒரு உயிர் காப்பாற்றப்படுவது –
ஒரு குடும்பம் காப்பாற்றப்படுவதற்கு
சமம்.

சிந்தித்து ஓட்டுங்கள்..
பொறுப்புடன் வாழுங்கள்."




அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

---

மங்கையொளி உதயம்

பயாஸா பாஸில்

# உங்கள் ஆற்றல்களை வளம் படுத்திக் கொள்ள முயற்சியுங்கள்



இன்றைய வேகமான உலகில் வெற்றி பெறுவது அறிவால் மட்டுமல்ல, நம்முள் உள்ள ஆற்றல்களை அறிந்து, அவற்றை வளர்த்துக் கொள்வதிலேயே உள்ளது. ஒவ்வொருவருக்கும் தனித்தன்மை வாய்ந்த திறன்களும் ஆற்றல்களும் உள்ளன. அவற்றை கண்டறிந்து, சரியான வழியில் பயன்படுத்தினால் வாழ்க்கையில் முன்னேற்றம் உறுதி.

முதலில், நம்முள் உள்ள ஆற்றல்களை அறிந்து கொள்ள வேண்டும். சிலர் எழுதுவதில் திறமை பெற்றவர்களாக இருக்கலாம், சிலர் பேசுவதிலும், சிலர் கலைத்திறன்களிலும் சிறந்து விளங்கலாம். நம் விருப்பங்கள், ஆர்வங்கள், திறன்கள் ஆகியவற்றை கவனித்து பார்த்தால், நம்முடைய வலிமைகள் எவை என்பதை எளிதாக புரிந்து கொள்ள முடியும்.

அடுத்ததாக, அந்த திறன்களை வளர்க்க தொடர்ந்து முயற்சி அவசியம். முயற்சி இல்லாமல் எந்த திறனும் வளராது. தினசரி பயிற்சி, வாசிப்பு, அனுபவம் ஆகியவை நம்முடைய ஆற்றல்களை மேம்படுத்த உதவும். தோல்விகள் வந்தாலும் மனம் தளராமல், அதை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும்.

மேலும், நேர முகாமைத்துவம் மிகவும் முக்கியமானது. நமது நேரத்தை பயனுள்ள செயல்களில் செலவழித்தால், திறமைகளை வளர்க்க அதிக வாய்ப்பு கிடைக்கும். தேவையற்ற விஷயங்களில் நேரத்தை வீணாக்காமல், இலக்கை நோக்கி செயல்பட வேண்டும்.

அதேபோல், நல்ல வழிகாட்டுதல் மற்றும் ஊக்கமும் மிக அவசியம். ஆசிரியர்கள், பெற்றோர், நண்பர்கள் ஆகியோரின் ஆதரவு நமக்கு தன்னம்பிக்கையை அளிக்கும். அவர்களின் ஆலோசனைகளை ஏற்று செயல்பட்டால், நம்முடைய திறன்களை இன்னும் சிறப்பாக வளர்த்துக் கொள்ள முடியும்.

முடிவாக, நம்முள் இருக்கும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்வது வாழ்க்கையின் முக்கியமான பொறுப்பு ஆகும். அதை உணர்ந்து, தொடர்ந்து முயற்சி செய்தால், நாம் நிச்சயம் வெற்றியின் உச்சியை அடைய முடியும். எனவே, இன்று முதல் உங்கள் ஆற்றல்களை வளம் படுத்திக் கொள்ள முயற்சியுங்கள்!

## அன்பான வாசகர்களே!

**அழகு மற்றும் பேஷன் ஆரோக்கியம், கல்வி, மன நலம், சமையல், வீட்டு முகாமைத்துவம் , தொழில், சுய முன்னேற்றம், சமூக விழிப்புணர்வு, கலாசாரம், பொழுது போக்கு போன்ற உங்கள் ஆக்கங்களை மங்கையொளி பக்கத்துக்கு அனுப்புங்கள்.**

0775486616




பாரா தாஹிர்

## பிறந்தநாள் வாழ்த்து



மாவனல்லை நயாவலையைச் சேர்ந்த M. S. F. Zoha தனது ஐந்தாவது பிறந்தநாளை 13/05/2026 அன்று வீட்டில் கொண்டாடினார். இவரை பெற்றார், உறவினர்கள், நண்பர்கள் வாழ்த்துகின்றனர்.

**படைப்பாற்றலை ஊக்குவித்து, பொது அறிவை வளர்த்து, பொழுது போக்குடன் கல்வியறிவை வளர்த்து, சிறாரிடத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் "உதய பூங்கா " எனும் சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பகுதியில் உங்கள் ஆக்கங்களை கட்டுரையாக, கவிதைகளாக, துணுக்குகளாக, விடுகதைகளாக, சிறுகதைகளாக, பிறந்தநாள் வாழ்த்தாக, சித்திரங்களாக, பாடசாலையில் நடைபெறும் நிகழ்வு களாக இவ் வட்சப் இலக்கத்திற்கு 0775323239 அனுப்பலாம்.**

## சிறுவர் சித்திரங்கள்



எம்.எச்.எம். ஹாஸிம்
தரம் - 5D
பாதுரியா கல்லூரி, மாவனெல்லை.



மொஹமட் ரயிஹான்
தரம் - 4A
SUSSEX INTERNATIONAL SCHOOL, Kandy.

# அன்னை!



அன்னை எனும் உயிர்த்துணை
அழுகையில் அருகில் நின்றவள்
நான் கண்ணீர் சிந்தும் முன்
என் வலி எல்லாம் உணர்ந்தவள்.

என் சந்தோஷத்திலும் கண்ணீரிலும்
என் நிழலாய் நடந்தவள்
என் உலகம் ஆனவள்

பசியெனில் பசியறியாமல்
பாசமாய் உணவாய் மாறினாள்
துயரெனில் துயர் மறந்தே
துணிவாய் என்னைத் தாங்கினாள்.

இரவு முழுதும் விழித்திருந்து
என் கனவுகளை காத்தவள்
தன் கனவுகளை மறந்துவிட்டு
என் வாழ்வில் வாழ்ந்தவள்.

நான் விழுந்த போதும் கூட
நம்பிக்கையாய் பிடித்த கைகள்
என் வெற்றிக்கு ஏணியாய்
நின்ற நிழல்கள்.

அன்னை என்றொரு சொல்
அழகான உலகம் தருகிறது
அவள் இல்லா ஒரு நொடி கூட
ஆயிரம் ஆண்டாய் தோன்றுகிறது!

**யு. டீ. பாத்திமா அப்ரூஸ்**
**குஃஅல் அக்ஸா ம. வி.**
**தரம் 10**

## குறுக்கெழுத்து போட்டி இல 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | ■ | 2 |
| | ■ | ■ | 3 | | |
| 4 | | ■ | | ■ | |
| | ■ | 5 | | ■ | |
| ■ | 6 | ■ | | ■ | ■ |
| 7 | | ■ | 8 | | |

**இடமிருந்து வலம்**

1.வெயில் காலத்துக்கு உகந்தது
3.வெற்றி தோல்வியை நிர்ணயிப்பது
4.பழம் என்றும் சொல்லலாம்
5.ஆண் பெயரொன்று
7.வீடு கட்ட தேவை
8.இடர் என்றும் சொல்லலாம்

**மேலிருந்து கீழ்**

1.விலை கூடியது
2.பாடசாலை சென்றால்
3.இதற்கு அடிமையாகக் கூடாது
6.வேலை ஒத்த கருத்து

**குறுக்கெழுத்து போட்டி 1 ஐ சரியாக பூர்த்தி செய்த வெற்றியாளர் மூவரின் பெயர்களை இங்கு பதிவிடுவோம். விடைகளை 0775323239 எனும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.**





மாவனல்லை "Foresigth" பாலர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா மாவனல்லை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் ஆசிரியை எம். எஸ். முனவ்வரா அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது.இதில் பிரதம அதிதிகளாக நாகூர் கம முஸ்லிம் வித்தியாலய முன்னால் அதிபர் கே. எம். பௌமி, மற்றும் ஹாபிலாவும் ஓய்வு பெற்ற ஆசிரியையுமான மௌலவியா எம். எஸ். எஸ். நஸீமா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## குட்டிக்கதை

# பரிவும் பாசமும்

சலசலத்தோடும் அந்த அழகிய கொட்டலி ஆற்றை அண்மித்தே மூவின மக்களும் ஒற்றுமையுடன் வாழும் கல்லளைக் கிராமம் அமைந்திருந்தது . அக்கிராம மக்கள் அந்த ஆற்று நீரைக் குளிக்கவும் ஆடைகளைக் கழுவவும் பயன்படுத்தினர். போதாக்குறைக்கு கால் நடைகளுக்கு குடிநீராகவும் பயன்படுத்தினர் . கொட்டலி ஆற்றின் முத்துப் போன்ற தெளிந்த நீரிலே பலவிதமான மீன்கள் துள்ளிக் குதித்து விளையாடும் காட்சியைக் கண்டு களிப்பதற்கு சிறுவர்களும் முதியோரும் அணிவகுத்து நிற்பர் .. அந்தக் கொட்டலி ஆற்றை அண்டிய நிலப் பரப்பில் வேளாண்மை செய்து வாழ்க்கையை ஓட்டினார்கள் அக்கிராம மக்கள்.அதுமாத்திரமின்றி மீன்பிடித் தொழிலையும் சீவனோபாயமாகக் கொண்டு வாழ்ந்தனர். கோடை காலத்தில் ஆற்றுநீர் வெகுவாகக் குறைவடையும். அப்போதெல்லாம் மக்கள் அதிகமாக மீன்களைப் பிடிப்பார்கள்.பிடித்த மீன்களை புகையூட்டி நகர்ப்புறங்களில் விற்பனை செய்து அதிகப் பணம் ஈட்டுவார்கள்.

ஒருநாள் ஐந்தாம் தரம் பயிலும் மாணவனான சினான் தனது தந்தையுடன் ஆற்றங்கரையில் நின்று கொண்டிருந்தான். தந்தையோ நீரில் இறங்கி வலைவீசி மீன் பிடித்துக் கொண்டிருந்தார். வெயில் கடுமையாக இருந்த காரணத்தினால் சினானுக்கு அவ்விடத்தில் நிற்க முடியவில்லை. சற்றுத் தொலைவில் நின்ற மருதமர நிழலுக்குச் சென்றான். அங்கே உடைந்து கிடந்த மரக்கிளை ஒன்றில் அமர்ந்து கொண்டான். அப்போது அவனுக்குப் பக்கத்தில் கீச் கீச் என்ற சத்தம் கேட்டது.

உடனே அவன் அங்கே உற்று நோக்கினான். இறகு முளைக்காத கிளிக் குஞ்சு ஒன்று கீழே கிடக்கக் கண்டு அதனைக் தனது கைகளில் எடுத்தான். இது வாயைப் பிளந்து இரை தேடியது.

சினானுக்குக் கவலை தாளவில்லை. உடனே கிளிக் குஞ்சினைக் கையில் ஏந்தியபடி வீட்டுக்கு ஓடினான். குஞ்சுக்குத் தண்ணீர் புகட்டினான். இரை கொடுத்தான். சிறிய கூண்டில் ஒன்றில் வைத்து வளர்த்து வந்தான்.ஒரு வாரம் கழிந்தது. ஓரிரவு சினான் ஒரு கனவு கண்டான்.

அவனது வீட்டைச் சுற்றி வட்டமிட்டபடி தாய்ப் பறவை கீச்சிடுவதாகக் கனவு.காலையில் எழுந்ததும். தந்தையிடம் கூறினான். தந்தையின் உதவியுடன் கிளிக் குஞ்சினை ஆற்றாங்கரைக்குக் கொண்டு சென்றான். அங்கிருந்த மருதமரப் பொந்தினுள் இருந்து தலையை வெளியே நீட்டியபடி தாய்க்கிளி கீச்சிட்டது.உடனே சினானின் கையில் இருந்த குஞ்சுக் கிளியும் கீச்சிட்டது. சினானின் தந்தை மரப் பொந்தினுள் கிளிக் குஞ்சினை வைத்தார். தாயும் குஞ்சும் ஒன்று சேர்ந்தனர். சினான் மிகுந்த களிப்புடன் வீடு சென்றான்.



**உயிர்களிடத்தில் அன்பு காட்டுவது நமது கடமையாகும்!**

**பளீல்தீன் ரஹ்மா சீனத்**
**தரம் 6**
**பொ/அல் அஸ்ஹர் மகா வித்தியாலயம், பொலன்னறுவை**

# தமிழகத்தில் முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் தலைமையிலான கூட்டணி வெற்றி பெறும்

## இலங்கையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அபார நம்பிக்கை

இந்த தமிழ்நாடு சட்ட சபை தேர்தலில் தமிழக முதலமைச்சரும், திமுக தலைவருமான மு. க. ஸ்டாலின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அமோக வெற்றி பெற்று, மீண்டும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு .க. ஸ்டாலின் மற்றும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி(ளுநஉரடயச ீசழபசநளளளைந யுடடயைஉந )யில் போட்டியிடும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உட்பட சில கட்சிகளின் தலைவர்களுக்கும் வாழ்த்துத் தெரிவித்து அவர் எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் நாளை மறுதினம் (23) நடைபெறவுள்ள தேர்தலில் முடிவுகள் வெளியாகி ,மே மாதம் 4ஆம் திகதி தமிழக முதல்வராக மீண்டும் மு. க .ஸ்டாலின் தெரிவு செய்யப்படுவார் என்பதில் வாக்காளர்களில் பெரும்பாலானோர் உறுதியாகஇருப்பதை கருத்துக் கணிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரது தலைமையிலான திமுக கட்சியுடனும், அதன் சகோதரக் கட்சிகளுடனும் நீண்டகாலமாக. அயல் நாடான இலங்கையில் நேசக் கட்சியாக இருந்து வருகின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ ின் சார்பில் முன்கூட்டியே வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக சட்ட சபைக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தற்பொழுது இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளன.

இந்த மதச்சார்பற்ற கூட்டணியில் திமுக வேட்பாளர்களுக்கு அப்பால் ,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் ஏ .எம் சாஜகான், வாணியம்பாடி தொகுதியில் எஸ். எஸ் .பி சையத் பாரூக் ஆகியோரும், மனிதநேய கட்சி சார்பில் நாகப்பட்டினம் தொகுதியில் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லாஹ்(தற்போதைய தமிழக சட்ட சபை உறுப்பினர்),



மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் வேட்பாளர் ப. அப்துல்சமது ,

எஸ் டி பி ஐ ( ளுழஉயைட னுநஅழஉசநவஉை ீயசவல ழக ஐனெயை)கட்சியின் சார்பில் நன்னிலம் சட்டமன்றத் தொகுதியில் முஹம்மது முபாரக், சிதம்பரம் சட்டமன்ற தொகுதியில் மனித நேய ஜனநாயகக் கட்சி சார்பில் தமீமுல் அன்சாரி ஆகியோர் வெற்றி வாகை சூடுவார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

மொத்தத்தில், இந்த தேர்தலில்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி அமோக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைப்பது குறித்து அவர் முன்கூட்டியே வாழ்த்தியுள்ளார்.

நான்கு முனைப் போட்டி நிலவுகின்ற தமிழக சட்ட சபைத் தேர்தலில் திமுக தனித்து போட்டியிடும் 164 தொகுதிகளிலும்,அதன் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் இதர கட்சிகள் போட்டியிடுகின்ற 70 தொகுதிகளிலும் அமோகமான வெற்றி வாய்ப்பு காணப்படுவதாக ஸ்ரீ லங் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் உறுதிபடக் கூறியுள்ளார்.

தமிழக அரசை திராவிட மொடல் அடிப்படையில் சிறப்பாக வழி நடத்தி வருகின்ற முதல்வர் மு.க ஸ்டாலின் மீண்டும் வெற்றி பெறுவதில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் கே .எம் காதர் மொகிதீன் உட்பட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் உச்சகட்ட பங்களிப்பை நல்கி வருவதையிட்டு மகிழ்சியடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஓச்சர்டவத்த முஸ்லிம் வித்தியாலய அதிபர் அன்வர்தீனுக்கான பிரியாவிடை நிகழ்வு





நிட்டம்புவை - ஹொரகொல்ல - ஓர்ச்சட் வத்த முஸ்லிம் வித்தியாலயத்தில், 2005 இல் ஆசிரியராகவும் 2009இல் அதிபராகவும் பதவியேற்ற திரு.A.W.அன்வர்தீன் அவர்கள் 02.04.2026 அன்று தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

இது தொடர்பாக பிரியா விடை நிகழ்வொன்று கடந்த வியாழக்கிழமை (02/04/2026) பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கம்பஹா,களனி வலய தமிழ்மொழிப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கௌரவ எம்.டீ.எம்.தௌஸீர் சேர் உட்பட கம்பஹா வலய பாடசாலைகளுக்குப் பெறுப்பான ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் கம்பஹா வலய தமிழ் மொழி மூல பாடசாலைகளின் அதிபர்கள்,இப்பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


## சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான உதவி கோரல்

**அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு**

என் பெயர் முகம்மது ரிஸான் மௌலவி. எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். தற்போது என் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் உள்ளன. நான் மிகவும் ஆபத்தான இறுதி கட்ட நோய்நிலையில் இருக்கிறேன். மருத்தவர்கள் உடனடியாக சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த சிகிச்சைக்காக சுமார் ஷரூ. 75 லட்சம் செலவாகும் என்று கூறப்பட்டுள்ளது. நான் மிகவும் ஏழ்மையான நிலையில் இருப்பதால் இத்தனை பெரிய தொகையை ஏற்பாடு செய்ய இயலாத நிலையில் உள்ளேன்.

எனவே, ரமழான் மாதத்தின் சதகா மற்றும் ஜகாத் நன்கொடையாக உங்கள் அளவிற்கு இயன்ற உதவியை செய்து எனது உயிரைக் காப்பாற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லாஹ் தாங்கள் செய்யும் ஒவ்வொரு உதவிக்கும் சிறந்த நற்கூலி வழங்குவானாக.

உதவி செய்ய விரும்புபவர்கள் கீழ்க்கண்ட எண்ணை தொடர்பு கொள்ளலாம்:
0758084332

**வங்கி விபரம்:**
பெயர்: M. R. F. RIZNIYA
வங்கி: HNB – Dehiwela
கணக்கு எண்: 093020030409

அல்லாஹ் தாங்கள் அனைவரையும் அருளாலும் நலனாலும் ஆசீர்வதிப்பானாக!

**(ஜஸாகல்லாஹு கைரன்)**


## ஊடகப் பயிற்சி நெறிக்காக துருக்கி புறப்பட்ட முஸ்லிம் மீடியா போர அங்கத்துவர்கள்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் (SLMMF) அங்கத்தவர்களுக்காக, இலங்கைக்கான துருக்கி தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட ஊடகப் பயிற்சி நெறியில் பங்கு பற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட 10 அங்கத்தவர்கள் இன்று துருக்கியின் அங்காரா நகர் நோக்கிப் பயணமாகினர்.

இப் பயிற்சி நெறிக்கான வேண்டு கோளை அமைப்பின் ஸ்தாபக போஷகர் என்.எம்.அமீன் விடுத்திருந்ததுடன், இப் பயிற்சி நெறியை சாத்தியமாக்குவதற்கான ஏற்பாடுகளை அமைப்பின் தலைவர் எம்.பி.எம்.பைறூஸ் முன்னெடுத்திருந்தார்.

இதற்கமைய, பங்குபற்றுனர்களின் தெரிவில் வெளிப்படைத்தன்மையை பேணும் பொருட்டு, 2026 பெப்ரவரி 28 ஆம் திகதி இந்தப் பயிற்சி நெறிக்காக அங்கத்தவர்களிடையே பகிரங்கமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதற்கமைய 15 அங்கத்தவர்கள் உரிய காலப்பகுதியில் விண்ணப்பித்திருந்தனர்.

தூதரகத்தின் வரையறைகளுக்கு அமைவாக, விண்ணப்பித்த 15 பேரிலிருந்து தகுதியான 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன், இக்குழுவை வழிநடத்திச் செல்வதற்காக அமைப்பின் உப தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான சிஹார் அனீஸ் தலைவரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

**பயணத்தை மேற்கொள்ளும் 10 பேர் கொண்ட ஊடகவியலாளர் குழு விபரம்:**

1) MOHAMED MOHAIDEEN MUBARAK (SLRC/ SLBC)
2) JUNAID RISWAN (Dan / Pirai TV)
3) SAM NIJAM MOHAMED SUHAIL (Vidivelli)
4) MOHAMED HARIS AHAMED ROOMY (Seven Sense Productions)
5) NOOR MOHAMED SAMEEHA – (News Bar)
6) MOHAMED HUSSAIN FATHIMA HUSNA (Thinakkural)
7) SEGU MOHIDEEN RIZWAN – (Thinakaran Online)
8) MOHAMED LUTHUFI MOHAMED AKRAM (UTV Lanka)
9) UMAR LEBBE NOORUL HUTHA (Thamilan)
10) MOHAMED ANEES MOHAMED SHIHAR (Team Lead)

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் துருக்கி தூதுவருக்கும் இடையிலான விசேட சந்திப்பு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

எதிர்வரும் காலங்களிலும் எமது அங்கத்தவர்களுக்கு இவ்வாறான சர்வதேச ஊடகப் பயிற்சி வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க போரத்தின் செயற்குழு தொடர்ந்தும் முயற்சிகளை முன்னெடுக்கும்.



பயணம் மேற்கொள்ளும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துகள்! நமது சக அங்கத்தவர்களின் பயணமும் பயிற்நெறியும் பாதுகாப்பானதாக அமைய அனைவரும் பிரார்த்திப்போம்.



அரபாத் பஹர்தீன்



# முத்தரப்பு ரி20 தொடர் திரில் வெற்றி பெற்றது

## இலங்கை 19 வயதிற்குட்பட்ட மகளிர் அணி

அவுஸ்திரேலிய 19 வயதிற்குட்பட்ட மகளிர் அணிக்கு எதிரான உத்தியோகபூர்வமற்ற ரி20 போட்டியில் இலங்கை 19 வயதிற்குட்பட்ட மகளிர் அணி 3 ஓட்டங்களால் திரில் வெற்றியைப் பதிவு செய்தது.

அவுஸ்திரேலியாவில் இடம்பெறும் முத்தரப்பு உத்தியோகபூர்வமற்ற 19 வயதிற்குட்பட்ட மகளிர் ரி20 தொடரில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் இலங்கை ஆகிய 3 அணிகள் மோதுகின்றன.

இதில் கடந்த 18ஆம் திகதி மெல்போர்ன் இயன் ஹீலி ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் இலங்கை 19 வயதிற்குட்பட்ட மகளிர் அணி அவுஸ்திரேலிய 19 வயதிற்குட்பட்ட மகளிர் அணியை எதிர்கொண்டது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்திருந்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை 19 வயதிற்குட்பட்ட மகளிர் அணி 19.4 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் லிமன்ஷா திலகரத்ண 35 ஓட்டங்களையும், ப்ரமுடி மெத்சர 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் அவுஸ்திரேலிய சார்பில் அய்ரா ஏரி 3 விக்கெட்டுகளை சாய்ந்தார்.

பின்னர் எட்டக்கூடிய 100 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலளித்த அவுஸ்திரேலிய 19 வயதிற்குட்பட்ட மகளிர் அணி 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொள்ள இலங்கை 19 வயதிற்குட்பட்ட மகளிர் அணி 3 ஓட்டங்களால் திரில் வெற்றியைப் பதிவு செய்து அசத்தியது.

துடுப்பாட்டத்தில் அலிஷா டெர்மோடி 25 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் சமுதி ப்ரபோத்த 3 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினார்.

# மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரிலிருந்து விலகினார் ஜெக்கோவிச்



மெட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி வருகிற 22ஆம் திகதி ஸ்பெயினில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இத் தொடரில் இருந்து முன்னாள் முதல்தர வீரரும், தற்போதைய தரப்படுத்தலில் 4ஆம் நிலை வீரருமான சேர்பியாவின் நோவக் ஜெக்கோவிச் விலகிக் கொண்டுள்ளார்.

தோள்பட்டை காயத்திலிருந்து இன்னும் முழுமையாக குணமடையாத காரணத்தினால் தான் இத் தொடரிலிருந்து விலகிக் கொள்வதாக ஜெக்கோவிச் அறிவித்துள்ளார்.

மேலும் நடப்புத் தரப்படுத்தலில் 2ஆம் நிலை வீரரும் முன்னாள் சம்மியனுமான ஸ்பெய்னின் சார்லஸ் அல்காரஸூம் மணிக்கட்டு உபாதை காரணமாக நடப்பு ஆண்டிற்கான மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரிலிருந்து விலகிக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச பெட்மிண்டன் போட்டிகளுக்கு விடை கொடுத்தார் விக்டர் அக்செல்சன்



டென்மார்க் நாட்டைச் சேர்ந்த இருமுறை ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியனான விக்டர் அக்செல்சன் தனது 32ஆவது வயதில் தொழில்முறை பெட்மிண்டன் விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இதன் மூலம் அவரது 16 ஆண்டுகள் நீண்ட சிறப்பான விளையாட்டு வாழ்க்கை நிறைவுக்கு வருகிறது.

கடந்த சில மாதங்களாக தொடர்ந்து ஏற்பட்ட முதுகு காயம் காரணமாக அவர் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் கடைசியாக 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற BWF China Masters போட்டியில் விளையாடினார்.

இந்த முடிவை அவர் நேற்று Badminton Europe உடன் பேசியபோது உறுதிப்படுத்தினார்.

மீண்டும் மீண்டும் ஏற்பட்ட முதுகு காயம் காரணமாக உயர்ந்த நிலை பயிற்சி மற்றும் போட்டிகளில் ஈடுபட முடியவில்லை என அவர் தெரிவித்தார்.

“அனைவருக்கும் தெரிந்ததுபோல், நான் நீண்ட நாட்களாக முதுகு பிரச்சினையால் அவதிப்பட்டு வருகிறேன். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அறுவை சிகிச்சை செய்துக்கொண்டேன், அதற்குப் பிறகு நீண்ட கால மீளுருவாக்க (rehabilitation) செயல்முறையையும் கடந்து வந்தேன்.

ஆனால், ஒக்டோபரில் மீண்டும் ஒரு பிரச்சினை ஏற்பட்டது.

அதன் பின்னர், தேவையான அளவில் விளையாடவும், பயிற்சி செய்யவும் முடியவில்லை. வலி காரணமாக போட்டிகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் மிகவும் கடினமான இந்த முடிவை எடுக்க வேண்டிய தாகிவிட்டது,” என்று அவர் கூறினார்.



# உலகக்கிண்ண தொடரில் ஈரான் பங்கேற்கும் ஜியான்னி இன்ஃபாண்டினோ

ஈரான் அணி இந்த முறை உலகக் கிண்ண கால்பந்து தொடரில் பங்கேற்கும் என ஜியான்னி இன்ஃபாண்டினோ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்மூட்டமான சூழ்நிலையால், ஈரான் உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் பங்கேற்க முடியாது என்று அந்த நாட்டின் விளையாட்டு அமைச்சர் தெரிவித்திருந்த நிலையில், அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

2026 உலகக் கிண்ண கால்பந்து தொடர் அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடா ஆகிய நாடுகளின் இணை நடத்துதலில் நடைபெற உள்ளது. மேலும், தாங்கள் பங்கேற்கும் போட்டிகளை அமெரிக்காவிற்கு வெளியே நடத்துமாறு ஈரான் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை வரும் நியூசிலாந்து ரக்பி அணி



இரண்டு போட்டிகளில் விளையாடுவதற்காக நியூசிலாந்தின் 85 கிலோகிராமுக்கு குறைந்த எடையுடைய (ருனௌநச 85மப) ரக்பி அணி எதிர்வரும் புதன்கிழமை நாட்டை வந்தடையவுள்ளது.

முதலாவது ரக்பி போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் (சுயஉநஉழரசளந புசழரனௌ) நடைபெறவுள்ளது.

இரண்டாவது போட்டி மே மாதம் 3 ஆம் திகதி கண்டி நித்தவெல மைதானத்தில் நடை-பெறவுள்ளது.